# "ஆணையிறவு தடை முகாமை அகற்றுதீர்: அரசாங்கத்திற்குக் கோரிக்கை"

Registered as a News paper in Ceylon விலை சதம் 1 ★★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு
THE EELA NADU

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 229
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 13 றஜப் 16 திங்கட்கிழமை [29-9-69]

# ஒன்றரை நாட்கள் சந்திரனில் அப்பல்லோ-12 வீரர் தங்குவர்

## 450 மீட்டர் தூரம் நடந்து ஆராய்ச்சிநடத்தவும்திட்டம்

நியூயோர்க், செப். 28

**அடுத்த நவம்பர் மாதம் சந்திரனுக்குச் செல்லவிருக்கும் அப்பல்லோ—12 விண்வெளிப்பயணிகள் இருவர் சந்திரனில் சுமார் ஒன்றரை நாட்கள் தங்கியிருப்பார்கள்**

ஹூஸ்டன் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது. அப்பல்லோ-12 வீரர்கள் சந்திரனில் சுமார் 32 மணிநேரம் தங்கி ஆராய்ச்சிகளை நடத்துவார்கள். அப்பல்லோ-11 வீரர்கள் 21 மணிநேரம் மட்டுமே சந்திரனில் தங்கியிருந்தனர்

அப்பல்லோ-12 வீரர்கள் சந்திரனில் புயற்கடல் என்ற ... துக்கொண்டிருப்பார்

அப்பல்லோ-12 வீரர்கள் பூமிக்குத் திரும்புகையில் சந்திரனிலிருந்து சுமார் 45 கிலோ கல் அல்லது மண்ணை எடுத்துக்கொண்டு வருவார்கள். அப்பல்லோ-11 வீரர்கள் கொண்டுவந்த சந்திர மண் மாதிரிகளைவிட இது 24 கிலோ அதிகமாகும்

அப்பல்லோ-12 வீரர்கள் இருவரும் சந்திரனில் இறங்கிய பின்னர் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சாதகமாய் இருந்தால் அப்பல்லோ-11 இறங்கிய இடத்திற்குப் போய் திரும்புவர், முடிந்தால் அப்பல்லோ-12 வீரர்கள் சந்திரனில் இறக்கிய ஈகிள் கலத்தையும் பார்வையிடுவர்

அப்பல்லோ-11 வீரர்களான நீல் ஆம்ஸ்ரோங், மைக்கேல் கொலின்ஸ், எட்வின் ஆல்ட்ரின் ஆகிய மூவ

## எகிப்திய கொமாண்டோ தாக்குதல்

கெய்ரோ. செப். 28

சைனாய் பாலைவனத்தின் வடக்குப் பகுதியில் இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ள இடங்களிலுள்ள ராணுவத்தளங்கள்மீது ஐக்கிய அரபுக் கொமாண்டோக்கள் விமானத்தில் சென்று கடும் தாக்குதல்களை நடத்தியதாக எகிப்திய அதிகாரிகள் அ... த்தனர்.

ஐக்கிய அரபுக்கொமாண்டோக்கள் விமானத்தில் சென்று தாக்குதல்களை நடத்தியிருப்பது இதுவே முதல்தட... யா

## தபாலில் வந்தன 350 தந்திகள்

யாழ்ப்பாணம், திங்கள்

தொலைபேசி பரிவர்த்தனை சீராக இயங்காதிருப்பதால் தந்திகள் கடிதமூலம் அனுப்பப்படுவது தினசரி கூடிக்கொண்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 350 தந்திகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடிதமூலம் அனுப்பப்பட்டன.

யாழ்ப்பாண நகருக்குள் மட்டுமே இவற்றில் 100 தந்திகள் அவசரமாக விநியோகிக்கப்படவேண்டியதாக விருந்ததாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 200 தந்திகள் மானிப்பாய், புங்குடுதீவு, சுண்டிக்குளி ஆகிய இடங்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்டு அனுப்பப்பட்டபோதும் அவை மாலை 4 மணிவரை விநியோகம் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் காலை தன்னை யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் சந்திககுமாறு கொழும்பிலிருந்து ஒருவர் அனுப்பிவைத்த தந்தியும் நண்பகலே உரியவருக்கு கிடைத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (கா. நி)

குடியேற்றத் திட்ட வாசிகளிடமிருந்து

## நீர்வரி இம்முறை அறவிடப்படமாட்டாது

யாழ்ப்பாணம், திங்கள்

மழை இல்லாததால் ஏற் ... மாவட்ட விவசாய இணைப்புக்குழுக்கூட்டத்தில் கொள்

## வன்னியசிங்கம் விழாவில் துரைரத்தினம் எம். பி.

கோப்பாய், ஞாயிறு

"இலங்கை சுதந்திரமடைந்தும் கூட தமிழ் பேசும் மக்கள் இரண்டாந்தரப்பிரஜைகளாக வாழ்வதைக் கண்டு சகியாது தன் உடல் பொருள் ஆவிஅனைத்தையும் தமிழனினைக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் அர்ப்பணித்து தொண்டாற்றியவர் அமரர் திரு. வன்னியசிங்கம். அவர் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக சீர்திருத்த வாதியாகவே வாழ் நாள் முழுவதும் திகழ்ந்தார். இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் மொழியுரிமை, குடியுரிமை, அரசுரிமை பெற்று வாழ வேண்டுமென்ற அடிப்படையை இலட்சியமாகக் கொண்டு தமிழரசுக் கட்சியை அமைத்து ஏகாதிபத்தியத்துக்கெதிராகப் போராடியவர் அவர்".

இவ்வாறுநேற்றுமாலை நீர்வேலிவடக்கில் நடைபெற்ற அமரர் திரு. வன்னியசிங்கம் நினைவு தின விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ள் கூறினார்.

அடுத்த பருத்தித்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் பேசுகையில், கூறியதாவது:-

"இன்றுள்ள அரசியல், சமுதாய, பொருளாதாரத்தில் பெரும் சீர்திருத்தம் ஏற்பட்டாலன்றி தமிழ் மக்கள் வாழ்வு சுபிட்சமடைய முடியாது. தற்பொழுதுள்ள ஆட்சி முறை அறவேமாற வேண்டும். நமது வாலிபர்கள் அரசாங்கஉத்தியோகத்தை நம்பியிராது உள்ளூர் பொருளாதார வளத்தை பெருக்க முன்வர வேண்டும். இன்றுள்ள ஆனையிறவுத் தடை முகாமை அகற்ற

(4-ம் பககம் பார்கக)

## வங்கி ஊழியருக்கு நேர்ந்தது என்ன?

### தேடுதல் முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மக்கள் வங்கியில் கடமையாற்றியஊழியரான வாலிபர் ஒருவர் காணமற்போனது சம்பந்தமாக அவருடன் கடமையாற்றிய மற்றொரு வங்கி ஊழியர் ரகசிய பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

கனகரத்தினம் யோகசுந்தரராஜா என்ற இவ் வங்கி ஊழியர் காணமற்போய் பத்துநாட்களுக்கு மேலாகிவிட்டதாம்.

இவர் எவ்வாறு காணமல் போனார். மரணமானாரா அல்லது எங்காவது மறைத்து வைக்கப்பட்டுள்ளாரா என்பது சம்பந்தமான எந்தத் தகவலுமே இதுவரை பொலிசாருக்கு கிடைக்கவில்லை.

கீரிமலைக்கடலில் நடத்திய தேடுதல் எந்தப் பலனையும் அளிக்கவில்லையென்றும், புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாகவும்பொலிசார் தெரிவித்தனர்.

கடைசியாகக்கிடைத்ததகவல் ஒன்றைத் தொடர்ந்து காணமல் போனவருடன் கடைசிநேரத்தில் காணப்பட்டதாகக் கூறப்படும் மற்றொரு வங்கி ஊழியர் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகதெரியவந்துள்ளது. (கா. நி)

## "வெள்ளைக்காரியை சந்திரமதியாக்கியவர்"

மட்டுவில், ஞாயிறு

"520 நூல்களை எழுதிய கலைஞர் ஆனந்தகுமாரசாமி உலகத் தமிழர் மத்தியிலே மேல்நாடு சென்று 'சேர்' பட்டமும் 'பாரிஸ்டர்' பட்

## ஜீ. சி. ஈ. (உயர்தர) பரீட்சை

கோட்டை, ஞாயிறு

எதிர்வரும் டிசம்பரில் கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்கள் அக்டோபர் 8-ம் தேதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது. நேரில் பெறுபவர்களுக்கு கல்வியமைச்சு விண்ணப்பப்பத்திரங்களை வழங்க ஆரம்பித்துள்ளது.

விஞ்ஞான மாணவர்களுக்கு இப்பரீட்சை டிசம்பர் 6-ந்தேதி தொடக்கம் 12-ம் தேதிவரை நடைபெறுமெனவும் கலைப்பகுதி மாணவர்களுக்கு ஏப்பிரலில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## எதிரிவிடுதலை

மல்லாகம், ஞாயிறு

பட்டப்பகலில் பகிரங்க வீதியில் வைத்து புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த பாலச்சந்திரன் என்பவரிடமிருந்து நீர் இறைக்கும் இயந்திரத்தை வழிப்பறி கொள்ளை செய்ததாக சுன்னாகம் பொலிஸாரால் எஸ். திருநாவுக்கரசு என்பவர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துககொள்ளப்பட்டது. விசாரணையின் பின் சாட்சி முரண்பாடு காரணமாக எதிரி விடுதலை செய்யப்பட்டார் எதிரி சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## பௌத்த தர்மம் பற்றி பிரதமர்

கண்டி, ஞாயிறு

'பௌத்த தர்மங்களை கடைப்பிடிக்காது சிங்கள சமூகம் முன்னேற்றமடைந்துவிடமுடியாது' என பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கண்டி பௌத்த மத நிலையத்தில் சேர் பொன்னட் சொய்சா கலாசார மண்டபத்தை ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வரி இம்முறை அறவிடப்படமாட்டாது

யாழ்ப்பாணம், திங்கள்

மழை இல்லாததால் ஏற்பட்டிருக்கும் வரட்சி காரணமாக குடியேற்றத்திட்டங்களில் விவசாயம் குன்றியிருப்பதால் இம்முறை இப்பகுதி விவசாயிகளிடமிருந்து நீர்வரி அறவிடுவதில்லையென்று நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மாவட்ட விவசாய இணைப்புக்குழுக்கூட்டத்தில் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டர்ஸ் தலைமையில்நடைபெற்றஇக்கூட்டத்துக்கு மிகக்குறைவான எம். பி.க்களே சமூகம் கொடுத்திருந்தனர். (கா. நி.)

# யாழ் நகரில் வட்டாரம் தோறும் பிரசவ விடுதி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நகரத்துக்கு மேலதிக சுகாதாரவைத்திய அதிகாரி ஒருவரும் அடுத்த ஜனவரியிலிருந்து நியமிக்கப்படவிருக்கிறார். நிதிக்குழு செய்த சிபார்சை யாழ்ப்பாண மாநகரசபையும் அங்கீகரித்துள்ளது.

தற்போதைய சுகாதார வைத்திய அதிகாரியான டாக்டர் வீ. நடராஜா பெருப்பகுதி நேரத்தை பிரசவ சிகிச்சையிலும், பிணி ஆய் வைத்தியத்திலும்செலவிடுவதால் நிர்வாக விடயங்களில்கவனம்செலுத்த முடியவில்லையென்று சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே மேலதிகவைத்திய அதிகாரி ஒருவரையும் நியமிப்பதென முடிவுசெய்யப்பட்டது.

ஜனவரி முதலாம் திகதி இப்பதவியை நிரப்புவதெனவும், அதற்குத் தேவைப்படும் சம்பளத்தை 1970-ம் வருட வரவு-செலவுத்திட்டத்தில்செய்வதெனவும் மாநகரநிதிக்குழுமுடிவுசெய்தது.

ஜனவரி மாதத்திலிருந்து யாழ்ப்பாண மாநகரத்தின் 23 வட்டாரங்களுக்கும் ஒவ்வொரு பிரசவ, பிணி ஆய் சிகிச்சைநிலையங்களை அமைக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (கா. நி)

மணிநேரம் தங்கி ஆராய்ச்சிகளை நடத்துவார்கள். அப்பல்லோ-11 வீரர்கள் 21 மணிநேரம் மட்டுமே சந்திரனில் தங்கியிருந்தனர்

அப்பல்லோ-12 வீரர்கள் சந்திரனில் புயற்கடல் என்றழைக்கப்படும் பகுதியில் இறங்கியபின் தமது கலத்திலிருந்து சுமார் 450 மீட்டர் தூரம்வரையில் நடந்து செல்வார்கள். அப்பல்லோ-11 வீரர்கள் 150 மீட்டர் தூரம் மட்டுமே சென்றனர்

அப்பல்லோ-12 வீரர்கள் இறங்கியதும் அவர்களில் ஒருவர் அங்குள்ள சுமார் 6 மீட்டர் ஆழமான குழியில் இறங்கி படங்கள் எடுப்பார். மற்றவர் குழியின் மேலே நின்று அவதானித்... சந்திரனில் இறக்கிய ஈகிள் கலத்தையும் பார்வையிடுவர்

அப்பல்லோ-11 வீரர்களான நீல் ஆம்ஸ்ரோங், மைக்கேல் கொலின்ஸ், எட்வின் ஆல்ட்ரின் ஆகிய மூவரும் நாளை தமது உலக சுற்றிப்பயணத்தை ஆரம்பிக்கிறார்கள். அடுத்தமாதம் 26-ம் திகதி அவர்கள் பம்பாய்க்கு வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

---

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினர் தமது எட்டாவது வருடாந்தக் கூட்டத்தை அடுத்தமாதம் 9-ம் திகதி மன்னாரில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

# "எப்பகுதி மக்கள்குறை தீர்க்கவும் எம். பி. முயற்சிக்கலாம்"

யாழ்ப்பாணம், திங்கள்

"ஆட்சிமன்ற உறுப்பினர் ஒருவருடுக்கு இலங்கையின் எப்பகுதியிலுமுள்ள மக்களின் குறைகளைத் தீர்க்குமாறு அரசாங்கத்தை கேட்பதற்கு உரிமையுண்டு. எனினும் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தம்தொகுதிகளின் அலுவல்களில்தான் பெரும்பாலும் ஈடுபட்டிருப்பர்."

கிளிநொச்சி எம். பி திரு. கா. பொ. இரத்தினம் நெடுந்தீவில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சியின் நெடுந்தீவுக் கிளைத் தலைவர் மு.குணசிங்கம் தலைமையில் நெடுந்தீவு சந்தை மைதானத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து பேசிய திரு. இரத்தினம், நெடுந்தீவு மக்களின் குறைகளை நிவர்த்திசெய்யத் தாம் தம்மாலான முயற்சி மேற்கொள்ளப்போவதாக உறுதி தெரிவித்தார்.

நெடுந்தீவு மக்கள் தமது ஊருக்கும், இனத்துக்கும், மொழிக்கும் உழைக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

திருவாளர்கள் மு.ஆலாலசுந்தரம், க. சேனாதிராசா, வே.இராசரத்தினம், க. சந்திரசேகரம் ஆகியோரும் பேசினர்.

---

அதிகாரிகள் அ[illegible]த்தனர்.

இக்கிய அரபுக்கொமாண்டோக்கள் விமானத்தில் சென்று தாக்குதல்களை நடத்தியிருப்பது இதுவே முதல்தடவையாகும். இஸ்ரேலிய நிலைகளைத்தாக்கியபின்னர் கொமாண்டோககள் அனைவரும் பத்திரமாகத் திரும்பிவிட்டதாக அறிவிககப்பட்டது அப்படி எதுவித தாககுதலும் நடந்ததாக இஸ்ரேலியர் அறிவிககவில்லை.

# உலகச் செய்திகள்

புதுடில்லி, செப் 28

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி திட்டமிட்டபடி அடுத்த மாதம் 3-ம் திகதி தருழ்நாட்டுக்கு விஜயம் செய்கிறார். 5ம் திகதிவரை இங்கு சுற்றுப்பயணப் செய்வார், புதுச்சேரிக்கும் சென்றுவிட்டு அங்கிருந்து 6ம் திகதி டில்லிவந்து சேருவார்.

## ஊரடங்கு தளர்த்தப்படுகிறது

புதுடில்லி, செப், 28

இனக்கலவரம் வெடித்து நூற்றுக்கணக்கான பேரை இரையாக்கிய ஆமதாபாத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகிறது. மாநகரசபை பஸ்கள் சேவையிலீடுபடுகின்றன, நிலைமை சீரடைந்து வருவதாக அரசாங்க அறிக்கைகள் தெரிவிக்கின்றன

## மாவோ பற்றிய நூல்

மாஸ்கோ, செப் 28

சீனத்தலைவர் மா-சே-துங்கின் சொந்த மகனின் மரணத்தில்கூட மாவோ மீது சந்தேகப்படக் கூடிய அளவுக்கு மர்மம் இருக்கலாமென சோவியத்தில்மாவோ பற்றி வெளியிடப்பட்ட நூலொன்றில் எழுதப்பட்டுள்ளது,

## மே ஜேர்மனில் தேர்தல்

பொன், செப் 28

மேற்கு ஜெர்மன்னின் ஆட்சி மன்றத்துக்கு 500 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப் பதிவு நடந்தது. இன்று பிரதமர் டாக்டர்கீசிங்கரின் கிறித்தவ சோஷலிச முன்னணியும், வெளிநாட்டு மந்திரியின் சோஷலிச முன்னணியும் இப்போது ஆட்சி நடத்துகிறது.

---

...சந்திரமதியாக்கியவர்"

மட்டுவில், ஞாயிறு

"520 நூல்களை எழுதிய கலைஞர் ஆனந்தகுமாரசாமியைப் போன்றவர்கள் ஐரோப்பிய நாடுகளிலேயும் இல்லை என்று அகில உலகமுமே பாராட்டுகின்ற வேளையிலே, தமிழன் மட்டும் அவரின் மகிமையை உணராமல் இருப்பது தமிழனின் ஒரு சாபக்கேடுதான்"

இவ்வாறு சாவகச்சேரியில் தென்மராட்சி இலக்கியமன்றத்தாரின் சார்பில் சிறப்புரை நிகழ்த்திய தொல்பொருள் நுண்கலைச்செல்வர் திரு. ஏ. இராகவன் கூறினார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, ஆசிரியர் திரு. க. கனகசபாபதி தலைமைதாங்கினார். திரு இராகவன் தொடர்ந்து கூறியதாவது:

உலகத் தமிழர் மத்தியிலே மேல்நாடு சென்று 'சேர்' பட்டமும் 'பாரிஸ்டர்' பட்டமும்பெற்ற முதல் தமிழன் ஆனந்தக் குமாரசாமியின் தந்தை முத்துக்குமாரசாமி என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்திலே வெள்ளைக்காரர்களைக்கொண்டு தமிழரின் தலைசிறந்த சத்தியத்தையே தெய்வமாகக் கொண்ட 'அரிச்சந்திரா' என்ற நாடகத்தை நடித்துக் காண்பித்து, விக்டோரியா மகாராணியின் பாராட்டு தலைப்பெற்ற பெருமைமட்டுமல்ல, ஒருஐரோப்பியபெண்ணையே, அச்சம், மடம், நாணம், பயிற்பு ஆகிய பண்புகளுக்குக் கட்டுப்பட்டு சந்திரமதியாக நடிக்கவைத்த பெருமையும் திரு. முத்துக்குமாரசாமிக்கேஉரியது. என்பது குறிப்பிடத்தக்கது.

கள சமூகம் முன்னேற்றமடைந்துவிடமுடியாது' என பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கண்டி பௌத்த மத நிலையத்தில் சேர் பொன்னம்பல ... சொய்சா கலாசார மண்டபத்தை, திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் பேசுகையில் மேல்நாடுகள் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடைந்திருந்தாலும் இலங்கையில் இப்போது நிலவிவரும் அமைதியான சூழ்நிலை குறித்து நாம் திருப்தி கொள்ளவேண்டும் என்றார்.

---

பண்டாரநாயக்காவுக்கு

# சிலை நிறுவ தீர்மானம்

கண்டி, ஞாயிறு

நேற்று முன்தினம் தலத்து ஓயாவில் நடைபெற்ற பண்டாரநாயக்கா ஞாபகார்த்தக் கூட்டத்தில் கண்டியில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின்சிலையொன்றை நிறுவ வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்துக்கு வண பண்டித ஹலியல சுமண தீசா தலைமை வகித்தார்.

# 'வருமானவரி மோசடி: கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'

## பிரதமர் உறுதி

கொழும்பு, ஞாயிறு

வரி கொடுக்காதுஏமாற்றுவோர்மீதும்மோசடி செய்வோர்மீதும் எவராக இருந்தாலும் அவர்கள்மீது எடுக்கப்படும் கடும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் தடைபோடாது என்று இன்று ஆட்சிமன்றத்தில் பிரதமர் உறுதி கூறினார்.

வருமானவரி சம்பந்தமாகவும் அந்நிய செலாவணியிலும் லேக்கவுஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பெருத்த மோசடிகளை நடாத்தியிருப்பதால் இவைபற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கவேண்டுமென எதிர்க் கட்சியைச் சேர்ந்த டாக்டர் கொல்வின் ஆர். டி, சில்வா திரு. திரு பீட்டர்கெனமன், திரு பிரின்ஸ் குணசேகரா ஆகியோர் வற்புறுத்தினர்கள்,

இதற்குப் பிரதமர் பதிலளிக்கையிலேயே வருமானவரி விஷயத்தில் மோசடி செய்பவர்கள் மீது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எடுக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் தலையிடாது என்று கூறினார்,

தற்காலிக நிதி மந்திரி திரு விமலசேன பேசுகையில் எதிர்க் கட்சியினர் போலவே இவ் விஷயத்திலும் தாமும் அக்கறையுள்ளவாகளாக இருப்பதாகவும் இவர்கள் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் கூறினார்.

## இடமாற்றம்

சங்கானை, ஞாயிறு

சங்கானை பொலிஸைசேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் தர்மதாச அக்டோபர் 1-ம் திகதியிலிருந்து தலைமன்னார் பொலிஸிற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்

---

உயிலங்குளம்

## சனசமூகநிலைய கூட்டணியின் குற்றச்சாட்டு

தம்பாலை, ஞாயிறு

'இந்த அரசாங்கத்தின்கீழ் படித்த வாலிபர்கள் மிகவும் வேதனையான வாழ்வை நடத்தி வருகிறார்கள். முதலாளி வர்க்கத்தினருக்கே அரசாங்கம் உதவி செய்து வருவதால் வேலையற்ற ஏழை வாலிபர்களின் பிரச்னைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு கலவெலையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி மகாநாட்டில் பேசிய டாக்டர்என். எம். பெரேரா கூறினார்.

---

பெற்றோலியம் கூட்டுத்தாபனம்:

# நள்ளிரவு முதல் மீண்டும் அத்தியாவசியசேவைபிரகடனம்

## வேலை நிறுத்தந்தொடர்கிறது

கோட்டை, திங்கள்

நேற்று நள்ளிரவு முதல் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் அத்தியாவசிய சேவை உத்தரவை மீண்டும் பிரகடனப்படுத்தியுள்ளது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் இது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

பெற்றோலியம் கூட்டுத்தாபன ஊழியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தத்திலீடுபட்டுள்ளனர், தேசிய சேவை அமைச்சர் பல சலுகைகளை ஊழியர்களுக்குக் கொடுக்க முன்வந்த போதிலும் தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட மறுத்து விட்டன என்று அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

விசேஷ சலுகைகளுக்காக 11 லட்சத்து 41 ஆயிரத்து 500 ரூபாய் வருடமொன்றுக்குச் செலவாகுமென அமைச்சு அதிகாரி தெரிவித்தார்,

ஊழியர்கள் கோரிக்கை சம்பந்தமாக ஆராய்வதற்கு செயற்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வேலை நிறுத்தத்தில் எவ்வித மாற்றமுமில்லை, ஆனால் சமரச முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

## கொழும்பில் குன்றக்குடி அடிகள்

கொழும்பு, ஞாயிறு

தமிழக அறிஞர் குன்றக்குடி அடிகளார் இன்று கொழும்புவந்து சேர்ந்தார். இன்று காலை இரத்மலானை விமானநிலையம் வந்து சேர்ந்தபோது சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

## 'மறைந்த பின்பே மதிப்பு'

பாணந்துறை, ஞாயிறு

'ஒருவர் மறைந்த பின்பே அவரது பெருமை பற்றிப் பேசுவது எமது சமூகத்தில் ஊறியுள்ள ஒருகுணம். திரு. பண்டாரநாயகா உயிருடன் இருந்தபொழுது அவருக்கெதிராக சிலர் கண்டனம் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதே மனிதர்கள் இப்போது பெரிதாகப்புகழ்ந்து பேசுகின்றார்கள்' என பண்டாரகம முன்னாள் எம். பி.திரு. கே.டி.டி. பெரேரா பாணந்துறையில் நடைபெற்ற பண்டாரநாயகா ஞாபகார்த்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

## பிரதமராக 23 வருடங்கள்

ஸ்டொக்ஹோம், செப் 28

சுவீடனில் 23 வருடங்களாகத் தொடர்ந்து பிரதமர் பதவியை வகித்து வந்த 68 வயதுடைய திரு. ஓர்லாண்டர் இன்று தமது பதவியை ராஜினாமா செய்தார். இப்பதவியை ஏற்பவர் நாட்டு நலனில் அக்கறை கொண்டுழைக்க வேண்டுமென அவர்வேண்டுகோள் விடுத்துள்ளார்,

## திருடியதாக வழக்கு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கதிரன் கந்தன் என்பவர் ரூபா 380 பெறுமதியான தங்கச் சங்கிலியைக்களவாடியதாக பொலிசாரால் குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்குபருத்தித்துறை மாஜிஸ்ரேட் திரு.கே.விக்னராசா விசாரணைக்காக அடுத்த மாதம் 8-ந்திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

## ஆட்சி மன்றத்தில்

# மறைந்த முன்னாள் கல்வி அமைச்சருக்கு புகழ்மாலை

கொழும்பு, ஞாயிறு

"கோயில் கட்டிக் கும்பிடப்பட வேண்டியவர்" என்று காலஞ்சென்ற முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் கன்னங்கராவுக்கு ஆட்சிமன்றத்தில் இன்று புகழ்மாலை சாத்தினர், தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும் ஊர்காவற்றுறை எம் பி யுமான திரு நவரத்தினம்.

இன்று ஆட்சிமன்றத்தில் முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் கன்னங்கராவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாலர் வகுப்புத்தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய பெரியார் என்றும் கூறினார் திரு. நவரத்தினம்,

நல்லூர் எம் பி டாக்டர் நாகநாதன் பேசுகையில் ஆசிரியராக இருந்து கல்வி அமைச்சராக டாக்டர் கன்னங்கரா அவர்கள் வந்ததால், கல்விதுறையில் நியாயத்தை அப்போது காண முடிந்தது என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்


### விற்பனைக்கு

நன்னீர் கிணறு, கொங்கிறீட் தண்ணீர்தாங்கி, சிறந்த மண்வளம் ஆகியவற்றுடன் முற்பக்கம் கோயில் வீதியும் வேளாள வகுப்பினர் வாழும் சுற்ருடலும் கொண்ட 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விரும்பின் 4 பரப்புகள் கொண்ட இரு துண்டுகளாகவும் விற்கப்படும். புரோக்கர் இல்லாது நேரடியாகத் தொடர்பு கொள்வதே விரும்பப்படும். Fry, 67, கோயில் வீதி, பிரையர் வளவு, யாழ்ப்பாணம். 1417

மோட்டார் வாகன சேர்விஸ் நிலைய உபகரணங்கள் விற்பனைக்குண்டு- ஸ்டான்லி சேர்விஸ்நிலையம், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 1438

### விற்பனைக்கு

கிளிநொச்சியில் இருக்கும் ஒரு பிரபல அடைவு கடை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1426, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1426


திருநெல்வேலியில்

## ஆண்டுவிழாவும் நவராத்திரியும்

யாழ்ப்பாணம், திங்கள் திருநெல்வேலி சைவ முன்னேற்றச் சங்கத்தின் மூன்ருவது ஆண்டுவிழாவும் நவராத்திரியும் அடுத்த மாதம் 12ம் திகதியிலிருந்து 21ம் திகதிவரை நடைபெறவிருக்கின்றது. பத்து நாள் விழாவிலும் திவ்ய ஜீவன சங்கத்தாரின் பஜனைவிசேஷ நிகழ்ச்சியாக இடம்பெறும்.


87வது தினம்

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த

விஜயா: சுரேஷ் கம்பைன்ஸ்

**குழந்தைக்காக**

தை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

மாதர்களுக்கு அரைக்கட்டணம்.

**யாழ் - வின்ஸர்**

தினசரி — 4 காட்சிகள்

★ எம். ஜி. ஆர். -★ ஜெயலலிதா

நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி, அசோகன் நடிக்கும்

**புதியபூமி**

இங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா | வெலிங்டன் (யாழ்நகர்)

இன்று மட்டும் 2-30 6-30 -930

திரைகளில் கடைசி 2 தினங்கள்




## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 29—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் மீ 61

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் விருந்து, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 இசைவிழா, 7-35குங்குமம், 8-00செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைவிழா, 10-30 செய்திச்சுருக்கம்.

## தேவாலயம் விஸ்தரிப்பு

பருத்தித்துறை, ஞாயிறு வதிரிஅர்ச் அந்தோனியார் கோயிலைசிலுவை வடிவில் விஸ்தரிப்பதற்காக 20,000 ரூபாய் செலவில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புதிய வேலைப்பாடுகளமைந்த இக்கட்டடம் ஆயிரம் பேரை ஒரே வேளையில் அடக்கக் கூடியதாயிருக்கும் இவ்வேலைகளைக் கட்டளைக்குருவானவர் வண. எஸ். சிங்கராயர் அடிகள் மேற்பார்வை செய்து வருகிருர்.


வல்வெட்டித்துறை

**றஞ்சனு தியேட்டர்**

தினசரி 6-30, 9-30.

பிரிபோயா, போயா 2-30

சிவாஜி - கண்ணம்பா - கிரிஜா நடித்த

**மனோகரா**

(புதிய கொப்பி)

**வெஸ்லி சினிமா**

மானிப்பாய்

தினசரி6-30, இரவு10-00


## ஓடர் நைசை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் சிவில்வழக்கு, விதிமுறைச் சட்டத்தின் (தொகுதி 101) 16-வது சரத்தின்கீழ் தாக்கலாகும் மனு.

1. வேலுப்பிள்ளை மாணிக்கவாசகன்.
2. தம்பாபிள்ளை சதாசிவம்.
3. வைத்திலிங்கம் கந்தையா.
4. சின்னப்பா வேலுப்பிள்ளை.
5. வேலுப்பிள்ளை தம்பு.
6. முத்துக்கறுப்டர் இராமலிங்கம்.
7. கதிரேசு சின்னத்தம்பி பொன்னுத்துரை.
8. கந்தையா கனகரத்தினம்.
9. சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம்.
10. பொன்னம்பலம் நடராசா.
11. சுப்பையா துரைராசா

பெட்டிசகாரர்கள் கொக்குவில்.

எதிராக

இல. டிரஸ்ட் 95

1. கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபைத் தலைவர் கந்தப்பிள்ளை பொன்னம்பலம்.
2. மேற்படி உப தலைவர் வயிரமுத்து சின்னத்தம்பி சிவகுரு.
3. மேற்படி காரியதரிசி பொன்னையா தம்பி.
4. மேற்படி உதவிக்காரியதரிசி முத்துக்குமாரு சபாரத்தினம்.
5. மேற்படி தனதிகாரி அப்பாத்துரை நடராசா
6. மேற்படி உதவி தனதிகாரி நவரத்தினம் யோகரத்தினம்.

பிரதிவாதிகள்

மேற்குறித்த பெட்டிசதாரர்கள் தம்மை கொக்குவில் கிழக்கிலிருக்கும் 'கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்' என்னும் இந்து ஆலயத்தின் பரிபாலகர்களாகவும் மனேஜர்களாகவும் பரிபாலன சட்டத்தின் 112-வது சரத்துக்கமைய கட்டளை பிறப்பிக்கும்படி மேற்குறித்த வழக்கைத் தொடர்ந்திருப்பதாலும் சிவில் வழக்கு விதிமுறைச் சட்டத்தின் 16-வது சரத்தின் பிரகாரம் மேற்குறித்த பிரதிவாதிகளைக் குறித்த கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலினதும், உடைமையினதும் வ[illegible]டுவோர் சார்பிலும் அவர்களுக்காகவும்எதிர்த்து வழக்காடுவதற்குக் கோரும் மனுத்தாக்கல் செய்திருப்பதாலும் மேற்படி மனுவை மேற்படி கோடு 1969-ம் ஆண்டு புரட்டாதி மாதம்

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 13-ந் திகதி (29-9-69)

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- கவலையின் தாக்குதல் உங்களை வேதனைப் படுத்தும். வீட்டில் கண்துடைப்பு வேலைகள் நடைபெறலாம். எதிலும் அதிக கவனம் செலுத்துக. சிலர் தனிவழி நாட்டத்தை விரும்பக்கூடும். அமைதி விரும்பத்தக்கது.

**ரிஷபம்**- இழந்த புகழை மீண்டும் சம்பாதிப்பதற்கு இன்று சிறப்பான தினம். விடாமுயற்சி எடுப்பின் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும். களஸ்திர வழியால் தனவரவுக்கு இடமுண்டு. புதுமுயற்சிக்கு நன்று.

**மிதுனம்**- அதிக ஆசை வைப்பதன் மூலம் அவஸ்தைப் படுவீர்கள். உங்களை ஏமாற்றுவதற்கென்றே சிலர் திட்டமிடுவார்கள். வெளியிடத்திலிருந்து அதிர்ச்சிதரும் செய்தியொன்றும் கிடைக்கலாம். துக்கதினம்.

**கடகம்**- தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். கல்வித்துறையில் சிறப்பான முன்னேற்றம் தென்படும். நீண்ட தூரப் பிரயாணமொன்றுக்குத் திட்டமிடப்படலாம். புகழ் வளருவதற்கும் இடமுண்டு.

**சிம்மம்**- புத்திரவழியால் முன்னேற்றம் தென்படும். குடும்பத்தில் உறவுமுறைகள் சுமுகமாக இருக்கும். நீண்ட நாள் பிரிந்திருந்த சகோதரர் ஒருவர் இன்று திடீர் வருகை தரக்கூடும். எதிர்பாராத திருப்பங்கள் மகிழ்ச்சியைத் தரும்.

**கன்னி**- துன்பத்தின் நிழல் தொடர்ந்துகொண்டேயிருக்கும். அரசபயத்துக்கும் இடமுண்டு எனவே அபாயகரமான காரியங்களில் ஈடுபடவேண்டாம். வைத்தியச் செலவுகளுக்காகப் பணம் விரயமாகும். தெய்வமே துணை.

**துலாம்**- இல்லம் இன்று கட்டி வெல்லம்போல் இனிக்கும் குடும்பத்தில் உங்களை எதிர்த்த முதியவர் ஒருவர் இன்று ஆதரவு கொடுப்பதற்கு முன்வருவார். கருத்தொருமித்தவர்கள் வாழ்க்கையில் களிப்பான சம்பவம் இடம்பெறும்.

**விருச்சிகம்**- நன்மையைச் செய்தாலும் கெட்ட பெயரே கிடைக்கும். உங்கள் ஆதரவைப் பெற்றவர்களே எதிர்ப்பதற்கு முன்வருவார்கள். உஷ்ணரோகத்தினுல் பாதிக்கப்படுவீர்கள். உடல்நலத்தில் கவனம் செலுத்தவும்.

**தனுசு**- தானதருமங்களை மனம் நாடும். இரக்க சிந்தை மேலோங்கி நிற்கும் பொதுப்பணியில் புகழ் கிடைப்பதற்கும் இடம் உண்டு. தெய்வநம்பிக்கையுடன் பல புதிய வெற்றிகளைச் சம்பாதித்துக்கொள்ளுவீர்கள்

**மகரம்**- கடமைக்கு முதலிடம் அளிப்பீர்கள் சிலருக்கு அரசினர் விருதும் கிடைக்கலாம். வெளியூர் மாற்றத்தின் மூலம் உத்தியோக உயர்வுக்கும் இடமுண்டு. எதிலும் கண்டிப்பான நடவடிக்கையை எடுப்பீர்கள்.

**கும்பம்**- உற்சாகமளிக்கும் செய்தியொன்று இன்று கிடைக்கும். எதிர்பார்த்த பணஉதவி வருவதற்கும் இடமுண்டு. எழுத்துலகில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவு பெருகும். பொதுவாகக் கலைஞர்களுக்குப் பொன்னான தினம்

**மீனம்**- பல வழிகளிலும் பணம் விரயமாகும், முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்குச் சிலர் முற்படுவார்கள். குடும்ப உறவுமுறைகளிலும் கசப்புத்தோன்றும். பொறுமைவேண்டும்.

## தனிச்சிங்களத்தில் விண்ணப்பங்கள்

வெள்ளவத்தை, ஞாயிறு பொதுக்கலைத் தேர்வுப் பரீட்சைக்குப் (ஜி.ஏ.கியூ) பதிவு செய்யும் பொ[illegible]டு விண்ணப்பப் படிவம் கோரிப் பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத் திலிருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களுக்குத் தனிச் சிங்கள மொழியில் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கிருர்களாம். இதனுல் தமிழ் மொழிமூலம் ஜி ஏ கியூ. படிக்கும் மாணவர்கள் மிகவும் அதிருப்தியும் கவலையுமடைந்துள்ளனர்.

# விளையாட்டு மைதானம் சம்பந்தமான வழக்கு

வல்வெட்டித்துறை, ஞாயிறு "இராமன் செம்பாடுவிளையாட்டுமைதானக் காணியை பூரணமாகப் பயன்படுத்துவதற்காக சுவீகரிப்பு வழக்கொன்றும் தாக்கல் செய்துள்ளபடியாலும். இவ்விளையாட்டுக் கழகத்திற்கு காரியதரிசியாக இருந்து வருகிற படியாலும் வழக்காளியானவர் என்மீது இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிருர்" இவ்வாறு வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகக் காரியதரிசியும், மல்லாகம் கிராமசபையின் லிகிதரும் எதிரியுமான நா. சி. கணேசமூர்த்தி என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

வல்வெட்டித்துறைநெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகக் காரியதரிசியும், மல்லாகம் கிராமசபையின் லிகிதரான நா.சி கணேசமூர்த்தி என்பவர் பொலிகண்டியைச் சேர்ந்த சின்னத்தம்பிபெண் ஆச்சிமுத்து என்பவருக்குச் சொந்தமான இராமன் செம்பாடு என்ற காணியில் ரூபா 850 பெறுமதியான 65 பனைமரங்களை வெட்டி சேதப்படுத்தியும் அவரை பயமுறுத்தியதாகவும் வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டு இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

கணேசமூர்த்தி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவதினம் நான் மல்லாகம் கிராமசபையிலிருந்து காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்குப் போனேன். இந்தக் காணியில் பெரும் பகுதி நிலம் விளையாட்டுக் காணிக்கு சொந்தமானது. மிகுதிப் பங்கையும் சுவீகரித்துக் கொள்வதற்காக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் சுற்றவாளியாகக்கண்டு விடுதலைசெய்தார். எதிரி சார்பில் புறக்டர்களான வி. செல்லத்தம்பி, எஸ். சண்முக சுந்தரம் அனுசரணையுடன் அட்வகேற் ஏ. அமிர்தலிங்கம் ஆஜராஞர் வழக்காளி சார்பில் பொலிசாருக்கு உதவியாக புறக்டர் எம் வேலும் மயிலும் ஆஜராஞர்.

## கரபந்தாட்ட சாம்பியன்

உடுப்பிட்டி, ஞாயிறு வடமாநில காரியாதிகாரி பிரிவுகளுக்கு இடையே நடாத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அல்வாய்- வதிரி நடாபிறதேர்ஸ் விளையாட்டுக்கழகம் சாம்பியன் கேடயத்தைத் தட்டிக் கொண்டது.

வடமராட்சிக்காரியாதிகாரி பிரிவுக் கோஷ்டியான அல்வாய்-வதிரி நடாபிறதேர்ஸ் விளையாட்டுக்கழகம் 1968-1969-ம் ஆண்டு உடுப்பிட்டிப்பகுதி சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது. திரு. என். தியாகராசா இக்கோஷ்டியின் கப்டனுகக் கடமையாற்றினர். வடமராட்சிக்காரியாதிகாரி பிரிவின் உடுப்பிட்டி வட்டார விளையாட்டு அதிகாரி திரு. கே கார்த்திகேசு இக்கோஷ்டிக்கு கரபந்தாட்ட "ஓவர் கேம்" போட்டியில் பயிற்சியளித்து வடமராட்சிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார்.

## 1100 பேருக்கு அன்னதானம்

கோட்டை, ஞாயிறு இலங்கை இந்திய நலன் நோக்கு சமாசம் காந்திநூற்ருண்டு விழாவையொட்டி அடுத்த மாதம் 2ம் திகதி ஸ்ரீ விஜயவர்த்நாம கோவிலில் 1100 மக்களுக்கு அன்னதானம் வழங்கவிருக்கிறது.


"புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்"

**ஏ. எவ். றேமண்ட்ஸ்,**

147, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.


குறைந்த செலவில் மனம்நிறைந்த

**அந்திய சேவை**

ரூபா 175/-

உயர்தர பிரேதப் பெட்டிகள் ரூபா 50/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்

பக்த பிரகலாதா

[ஈஸ்ட்மன் கலர்]

---

நாளை முதல் 1-10-69 முத

| | | |
|---|---|---|
| கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாஸா (கொழும்பு) | வெலிங்டன் ((யாழ்ப்பாணம்) |

ஆகிய திரைகளில்
ரி. ஆர். ராமண்ணாவின் டைரக்ஷனில் உருவாகி
ரவிச்சந்திரன் ★ ராஜ்ஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்

நீயும் நானும்

---

நடித்த
மனோகரா
(புதிய கொப்பி)

---

## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
என். டி. ராமராவ்-தேவிகா
நடித்த
ராஜமகுடம்

---

## ஸ்ரீ காலிங்கா

இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர் -சரோஜாதேவி
நடித்த
திருடாதே

---

REGAL JAFFNA
Daily 4 Shows
Yul Brynner,
Julian Mateos
in
RETURN OF THE SEVEN
(Color)

---

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45p m
Carl Mohner as Jeffbenson
in
30 WINCHESTER s FOR
ELDIABLO
(Scope-color)
filling the wide screen with
action and suspense

---

விலும், உடைமையினதும் வழிபடுவோர் சார்பிலும் அவர்களுக்காகவும் எதிர்த்து வழக்காடுவதற்குக் கோரும் மனுத்தாக்கல் செய்திருப்பதாலும் மேற்படி மனுவை மேற்படி கோடு 1969-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5-ம் திகதி அனுமதித்திருப்பதாலும் இத்தாக்கல் குறித்த ஆலயத்தின் வழிபடுவோர் சார்பில் குறித்த பிரதிவாதிகளுக்கெதிராக பரிபாலன கட்டளை பிறப்பிக்கும்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்பதை குறித்த ஆலயத்தின் வழிபடுவோருக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

இவ்வழக்கின் தவணை 1969-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 26-ம் திகதி

கோட்டுக்கட்டளைப்படி.
பிரதம லிகிதர்.

வரையப்பட்டது
மு. மதியாபரணம்,
புரக்டர்,
பெட்டிசகாரர்கள். 1755

---

## சாரதா நிலைய கட்டடம்

உடுப்பிட்டி, ஞாயிறு
பருத்தித்துறை ஸ்ரீசாரதா நிலைய சேவாச்சிரமத்திற்கெனப்புதிய கட்டடம் உருவாகும். எதிர் வரும் டிசம்பர் மாதம் ஸ்ரீ சாரதா தேவியின் ஜயந்தியன்று சேவாச்சிரமத்திற்கான அத்திபாரக்கல் நாட்டப்படவிருக்கிறது.

---

பரீட்சைக்குப் (ஜி.ஏ.கியூ) பதிவு செய்யும் பொ...டு விண்ணப்பப் படிவம் கோரிப் பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கும்

ப் படிவங்களை அனுப்பி வைக்கிறார்களாம். இதனால் தமிழ் மொழிமூலம் ஜி ஏ கியூ. படிக்கும் மாணவர்கள் மிகவும் அதிருப்தியும் கவலையுமடைந்துள்ளனர்.

டன் அட்வகேற் ஏ. அமிர்தலிங்கம் ஆஜரானார் வழக்காளி சார்பில் பொலிசாருக்கு உதவியாக புறக்டர் எம் வேலும் மயிலும் ஆஜரானர்.

ரூபா 175.-
உயர்தர பிரேதப் பெட்டிகள்
ரூபா 50/-

---


தினசரி 3 காட்சிகள்
பிரிபோயா, போயா: 4 காட்சிகள்.

# ராணி சினிமா

(யாழ்ப்பாணம்)

★ சிவாஜி கணேசன்
★ சௌகார் ஜானகி
★ வெண்ணிற ஆடை நிர்மலா
★ எம். என். நம்பியார்
★ பாலாஜி
★ சோ
நடித்த

# லக்ஷ்மி கல்யாணம்



---



# டிஸ்பிரின்

கொண்டு
தலைவலி, நோவு, சளிசுரம்,
காய்ச்சல், தடிமலிலிருந்து

# நிகரற்ற துரித நிவாரணம் பெறுங்கள்




### அதி துரித நிவாரணம்

டிஸபிரின கரையக் கூடியதாகையால் இரதஓோட்டத்தில் விரைவில் சேறியும் போதே உடனடியாகச் செயலாற்றத் தொடங்கி மிகத் துரிதமான, மிக உறுதியான நிவாரணத்தை அளிக்கிறது.

### பாவிப்பதற்கு அதி பாதுகாப்பானது

டிஸ்பிரின் பல நாடுகளிற் பாவித்துப் பரீட்சிக்கப்பட்டு, ஒழுங்கான பாவனைக்கு பாதுகாப்பானது என்று காணப்பட்டுள்ளது. சாதாரண மாத்திரைகளைப் போலன்றி டிஸபிரின கரையக் கூடியதாகையால், அது உங்கள் வயிற்றில் அசௌகரியத்தையும் பாதகவிளைவுகளையும் உண்டு பண்ணக் கூடிய அமிலத்துகள்களை விடுவதில்லை.

### டாக்டர்கள் சிபாரிசு செய்வது

உலகெங்குமுள்ள டாக்டர்கள டிஸபிரினை நம்பிக்கையுடன சிபாரிசு செய்கிறார்கள. ஏனெனில டிஸபிரின மேலும் துரிதமான, பாதுகாப்பான, உறுதியான நிவாரணமளிக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள்.

2 மாத்திரைகளை நீரில் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

**நிகரற்ற துரித நிவாரணத்திற்கு எப்போதும் டிஸ்பிரின் பாவியுங்கள்.**

ஒரு றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டல சார்பற்ற நாடுகள் கூட்டத்தில் பாகிஸ்தானுக்கு இடமில்லை

## இந்தியாவின் ஆட்சேபம் ஏற்கப்பட்டது

நியூயோர்க், செப். 29

மண்டலசார்பற்ற நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கூட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கு பாகிஸ்தான் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவந்திருக்கும் மண்டலசார்பற்ற நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் தனியாக ஆலோசனை மாநாடொன்றை நடத்துகிறார்கள். இந்த மாநாட்டில் தானும் சேர்க்கப்படவேண்டும் என்று பாகிஸ்தான் கேட்டுக் கொண்டது. ஆனால் மண்டல சார்பற்ற நாடுகள் மாநாட்டில் பாகிஸ்தான் சேர்க்கப்படுவதை இந்தியா கடுமையாக எதிர்த்தது.

பாகிஸ்தான், தான் மண்டலங்கள் எதிலும் அங்கம் வகிக்கவில்லையென்று பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்றும் அப்படிச் செய்யாதபட்சத்தில் அதனை மண்டல சார்பற்ற நாடுகள் மாநாட்டில் சேர்க்கக்கூடாதென்றும் இந்தியாவின் வெளிநாட்டமைச்சர் திரு தினேஷ்சிங் வற்புறுத்தினார்.

பாகிஸ்தான் தென் கிழக்காசிய ராணுவக்கூட்டிலும் 'சியாட்டோ' மத்திய ராணுவக் கூட்டு 'சென்டோ' ஆகியவற்றில் அங்கம் வகிப்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. வல்லரசு நாடுகளின் நிர்ப்பந்தத்துக்குள்ளாகாமல் சுதந்திரமாக இயங்கும் நாடுகளே மண்டலசார்பற்ற நாடுகள் என்று திரு தினேஷ் சிங் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கிக்கூறியதாகத் தெரிகின்றது.

நேற்று மண்டலசார்பற்ற நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கூட்டம் ஆரம்பமானபோது கூட்டத்துக்கு தலைமைவகித்த எதியோப்பிய பிரதிநிதி இந்தக் கூட்டத்தில் பாகிஸ்தான் கலந்து கொள்ளமுடியாது என்பதை அறிவித்தார்.

### அமைதி ஆண்டு

ஐ. நா. தனது 25-வது வருட நிறைவைக் கொண்டாடும் 1970-ம் ஆண்டை அமைதி ஆண்டாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என்று இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. தினேஷ்சிங் யோசனை கூறியிருக்கிறார்.

## உ. வே. சாமிநாதையர் சேவைக்குப் பாராட்டு

உரும்பராய், ஞாயிறு

'பழைய நூல்களைப் பதிப்பித்தோரான டாக்டர் உ. வே. சாமிநாதையர் தாம் பதிப்பித்த நூல்களில் அருஞ்சொற்கள் தொடர்களை அகராதிக் கிரமஞ்செய்து பொருள் விளக்கமும் தந்திருக்கிறார். இவ்வாறான ஒரு அகராதி கம்பராமாயணத்துக்கு அத்தியாவசியமானது. கம்பராமாயணம் கற்றோரையும், மற்றோரையும் வசீகரிப்பதொடு அமர காவியம், கம்பரின் கற்பனை சக்தி, முதநூல் செய்த முனிபுங்கவர்களையே ஆசீர்வதிக்கச் செய்யும். இந்திய பாஷைகளில் வெளிவந்த எந்த ராமாயணமும் கம்பராமாயணத்துக்கு ஒப்பாகாது. மகத்துவம் மிக்க கம்பராமாயணத்தில் வரும் அருஞ்சொற்கள் தொடர்களை அகராதிக் கிரமஞ் செய்துவரும் இடங்களையும் குறிப்பிட்டுப் பொருள் விளக்கஞ்செய்வது காவிய உலகுக்குச் செய்வதொடு பேருபகாரமாம்.'

இராமநாதன் கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் திரு. அ. சே. சுந்தரராஜனால் எழுதி வெளியிடப்பட்டுள்ள கம்பராமாயண அருஞ்சொல்லகராதி என்னும் நூலைப் பற்றிய ஒரு மதிப்புரைச் செய்தியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## சிங்களத்தில் கமிஷன் அறிக்கை

கோட்டை, ஞாயிறு

பொலிஸ் பகுதி சம்பந்தமாக நடைபெற்ற விசாரணைக் கமிஷன் அறிக்கை சிங்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவாவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இக்கமிஷனுக்கு திரு. ஹேமா பஸநாயகா தலைமை தாங்கினார்.

### 51-வது மகாநாடு

கோட்டை, ஞாயிறு

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் 51-வது மகாநாடு டிசம்பர் மாத இறுதிப் பகுதியில் திருக்கோணமலையில் நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாடு சம்பந்தமாக திருக்கோணமலை பௌத்த நிலையத்தில் திருக்கோணமலைப்பகுதி பௌத்த குருமார்களும் மற்றும் பௌத்த சங்கங்களின் அதிகாரிகளும் மகாநாடு கூடி கலந்தாலோசித்துள்ளனர்.

இம்மகாநாட்டில் அரசாங்க அதிபர் திரு. சோமபால குணதீரா வரவேற்புக்குழுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மகாநாட்டுக்கான ஆயத்தங்களையெல்லாம் இவர் கவனிப்பார் எனத்தெரிகிறது.

## மூதூர் எம்.பிக்கள் கருத்து

மூதூர், ஞாயிறு

இன மதபேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் தேசிய அரசாங்கம் முன்வந்துள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் செய்து வருகிறது.

இவ்வாறு மூதூர் முதலாவது எம். பி. ஜனாப் எம். ஈ. எச். முகமதலி மூதூர் இஸ்லாமிய அரசாங்க சேவை ஊழியர் சங்க கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மௌலவி எம். ஐ. எம். மசூர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மூதூர் இரண்டாவது எம். பி. ஜனாப் ஏ. எல். அப்துல் மஜீத் பேசுகையில் முஸ்லிம்கள் கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்றும் முஸ்லிம்கள் தமது உரிமைகளுக்காகப்போராட வேண்டும் என்றும் கூறினார்.

## ஆங்கிலம் அவசியம் கற்க வேண்டும்

— தேரோ

'ஆங்கிலம் சர்வதேச மொழி. ஆதலால் அம்மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை நாம் ஏற்க வேண்டும்'

நாத்தாண்டியா தொகுதியில் ஆங்கில தினவிழாவில் உரையாற்றிய வண நரவில தர்மரத்தினபீடான தேரோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் பாடசாலைகளில் ஆங்கிலத் தரக் குறைவையிட்டுத்தான் மிகவும் வருந்துவதாகவும் தெரிவித்தார்.

## 'நல்ல நாடகங்கள் எப்படியிருக்க வேண்டும்?'

### வித்தியாதிகாரி கூறுகிறார்

மாவிட்டபுரம், ஞாயிறு

"தென்னிலங்கையில் உள்ள சிங்களம் கற்றோர் கலைகளைப் பொழுதுபோக்குச் சாதனமாகக் கருதுவதில்லை. இப்பொழுது அவர்கள் பெரும்பாலும் மேலான கலையுணர்வைப் பெறுவதற்காகவே கலை நிகழ்ச்சிகளுக்குச் செல்கிறார்கள். ஆனால் எம்மவரில் கற்றோர் கூட பொழுதுபோக்கிற்காகவே நாடகம் முதலியவற்றிற்குச் செல்கிறார்கள். இந்நிலை மாறினால் தான் ஈழத்திலே உயர்ந்த படைப்புக்களை நாடகத் துறையில் காண முடியும்."

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயக் கிணற்று நிதிக்காக நடைபெற்ற கதம்பவிழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய வட்டார வித்தியாதிகாரி திரு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. கந்தையா விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திரு. சோமசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"அதிக காலம் தொட்டே எந்நாட்டிலும் கலை உலகில் வேத்தியல், பொதுஇயல் என்ற இருவகைப் பிரிவுகள் நிலவி வந்திருக்கின்றன. கலை பொழுதுபோக்கிற்காக உபயோகப்படுத்தப்படுகின்ற இடத்திலே மேலான கலையுணர்வைக் கொடுக்காது வெறும் பொதுவியலாக மாறிவிடுகிறது. தென்னிலங்கையில் தற்போது காணப்படுகின்ற கலை விழிப்பிற்குக் காரணம் கற்றோர் பொழுதுபோக்கு நாடகங்கள்.

வேண்டாமென ஒதுக்கிக் கலையை பொழுதுபோக்காகக் கொள்ளாது கலை உணர்வுமிக்க வேத்தியலை நாடி நிற்பதேயாகும். இக்காரணத்தினால்போலும் சிங்கள மக்கள் சினிமா, நாட்டியம், ஓவியம் போன்ற துறைகளிலே அகில உலக புகழை ஈட்டியதுமன்றி பல அகில உலகப் பரிசுகளையும் தட்டிச் சென்றிருக்கின்றனர். உதாரணமாக லெஸ்ரர் ஜேம்ஸ் பிரிஸின் "கம்பரேலியா", "ரேகாவா" ஆகிய சினிமாக்களும், சென்கா சேனநாயக்காவின் ஓவியங்களும், சித்திரசேனாவின் நாட்டிய நாடகங்களும் குறிப்பிடத்தக்கன.

நாடகத்துறையில் தற்பொழுது நிலவிவரும் ஒரு முக்கிய பிரச்னை எந்தவிதமான மொழியை நாடகத்திற்கு உபயோகப்படுத்த வேண்டுமென்பது. காளிதாசன் காலத்தில் சாதாரண மக்கள் புராகிருதம் போன்ற மொழிகளைப் பேசினார்கள் எனினும் அவர் உயர்ந்த சமஸ்கிருத மொழியிலேயே தான் நாடகங்களைத் தந்தார். அண்மையில் வாழ்ந்த உலக நாடகக் கவிஞன் பெனார்ட்சோ கொச்சை ஆங்கிலத்தில் தமது நாடகங்களை எழுதவில்லை. அவர் மிக அழகு வாய்ந்த செந்நடையிலேயே தமது நாடகங்களையாத்தார். இவ்வாறிருக்க தமிழ் நாடகங்களுக்கு மட்டும் செந்நடையில்லாமல் கேவலமான புன்னடையில் ஏன் எழுத்தாளர் எழுதவேண்டும். இது தற்கொலைக்குச் சமானமாகும்.

வித்தியாலய அதிபர் திரு. கந்தையா வரவேற்புரை நிகழ்த்தினார். பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் சிறுவர்களின் 'நட்பின் வெற்றி" என்னும் நாடகமும், மாணவர்களின் கலையால் அழிந்த கர்வம்" என்னும் நாடகமும், இணுவில் இசை நடன கிராமிய கலைக்கல்லூரிப் பரதக் கலைச் செல்விகளின் நாட்டிய விருந்தும் இடம்பெற்றன. மாணவர்களின் "கலையால் அழிந்த கர்வம்" என்னும் நாடகத்தைப் பார்வையிட்ட கலையரசு சொர்ணலிங்கம் மேற்படி நாடகத்தைத் தரமான நாடகம் எனப் பாராட்டினார்.

# மனதுக்குச் சாந்தி அளிக்கும் கலைகளையே பார்க்கவேண்டும்

## காமகோடி பீடம் புதுப் பெரியவர் அறிவுரை

காஞ்சிபுரம், செப். 28

"மனதிற்கு விசாரம் ஊட்டும் கலைகளைவிடுத்து மனத்துக்குச் சாந்தி அளிக்கும்கலைகளை ரசிக்கப்பழகிக்கொள்ள வேண்டும்" என்று காஞ்சி காமகோடிபீடம் புதியபெரியவர் ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள் கூறினார். நான்கு நாட்கள் நடைபெற்ற ஆகம, சிற்ப, புராதன கலை விழாவில் அவர் முடிவுரை நிகழ்த்தினார். அவர் கூறியதாவது:-

"மனத்திற்கு சாந்தியளிப்பதே கலைகளின் நோக்கம்; கலைஎன்றபெயரில்பலநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இங்கு நடக்கும் கலை நிகழ்ச்சிகளைக்காணும்போது ஏற்படும் மன அமைதி மற்றக் கலைகளைக் காணும்போது ஏற்படுகிறதாஎன்பதை அவரவர்கள் யோசித்து முடிவு செய்து கொள்ள வேண்டும். நாம் அன்றாடவாழ்க்கையில் அனுபவிக்கும் கஷ்டங்களையே மற்றக்கலைகள் பிரதிபலிக்கின்றன. இலவசமாகவே கிடைக்கும் கஷ்டங்களை, சினிமாவுக்கும் நாடகத்...

தூண்டுவனவாக இருக்க வேண்டும். மனிதன் நல்லவனாக வாழக்கடவுள் பக்தியும் அவன் மனச் சாந்திக்கு நல்ல கலைகளும் அவசியம். கோயிலுக்குப் போய் தவறுகளை மன்னித்து விடும்படி பகவானைப் பிரார்த்திப்பதுடன், இனி அத்தவறுகளைச் செய்யாமலிருக்க உறுதி கொள்ள வேண்டும். தினமும்காலையில் வேலைக்குச் செல்லும் பொழுது கடவுள் பக்தி செய்து விட்டுப்போகவேண்டும். இரவில் மனச் சாந்தியுடன் தூங்கச்செல்ல வேண்டும் இந்த இரு சமயங்களிலும் கடவுளை நினைப்பது அவசியம். இனிய பக்திப் பாடல்களைக்கேட்கும்பொழுதும், பொம்மலாட்டம் போன்ற கலைகளைக்காணும் பொழுதும் மனத்திற்கு விகாரம் ஏற்படுவதில்லை. அத்தகைய கலைகளை அனுபவிக்கப் பழகிக் கொள்வதற்காகவே இந்த சதஸ்களில் அவை ஏற்பாடு செய்யப்படுகின்றன.

"பக்தி பண்ணி விட்டு உடனே கைமேல் பலன்...

...குப் பிரதி பலன் கேட்கக் கூடாது அப்படிக் கேட்டால் அது வெறும் பண்டமாற்று வியாபாரமாகிவிடும். பகவானிடம் இல்லாதது ஒன்றுமில்லை நாம் கொடுத்து அவருக்கு எதுவும் ஆக வேண்டுமென்பதில்லை. நாம் அவருக்குக் கொடுக்கக் கூடியது பக்தி கலந்த மனத்தைத் தான் நாம் பகவானிடம் அற்ப விஷயங்களைக் கேட்கிறோம்; அவை நடந்து விடுகின்றன. ஆனால் அவற்றைத் தொடர்ந்து இன்னும்பெரிய கஷ்டங்கள் வந்து விடுகின்றன. ஆகவே நாம் பகவானிடம் பக்தியை 'நல்லபுத்தியைக்கொடு' என்று கேட்க வேண்டும்".

"இந்த சதஸ்போன்ற நல்ல சூழ்நிலை நிலவும் இடங்களில் கலந்து கொள்ள வேண்டும். இதுபோன்ற சூழ்நிலைகளை அடிக்கடி ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இந்த சதஸ்கள் ஒவ்வொருவருஷமும் ஒவ்வோரிடத்தில்நடக்கின்றன. இவை ஒருவருஷம் நடந்த இடத்தில் மறுவருஷம் ...

சவானை பிரதமராக்குவதற்கு

# இந்திராவைக் கவிழ்க்க காமராஜரும் சதி செய்தாரா? சி. எஸ். தகவலைத் தொடர்ந்து அரசியல் வட்டாரங்களில் கேள்வி



மனச்சாட்சியின் படி ... வர்கள் மீது காரிய கமிட்டியைக் கொண்டு நடவடிக்கை எடுத்த இருமதி இந்திரா ...



## "ஆங்கிலத்தின் தரக்குறைவுக்கு ஆசிரியர்கள் காரணமல்ல"

உடுவில், ஞாயிறு

'சுயமொழி மூலம் கல்விப் போதனை ஆரம்பித்த பின்னர் நாட்டில் ஆங்கிலக் கல்வியின் தரம் குறிப்பிடக் கூடிய அளவு தரம்குறைந்திருப்பது உண்மை. ஆங்கில மொழிமூலம் கல்விபோதிக்...

கல்வி அதிகாரி திரு. எஸ். இராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

மாணவர்களின் வளர்ச்சியில் பெற்றோரும் ஊக்கம் காட்டவேண்டும். தம்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பினால் மட்டும் போதாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொள்ள வேண்டும். நாம் அன்றாடவாழ்க்கையில் அனுபவிக்கும் கஷ்டங்களையே மற்றக்கலைகள் பிரதிபலிக்கின்றன. இலவசமாகவே கிடைக்கும் கஷ்டங்களை, சினிமாவுக்கும்நாடகத்திற்கும் காசுகொடுத்துஅனுபவித்து விட்டு வருகிறோம். கலைகள் தூயஉணர்ச்சிகளைத்

அத்தகைய கலைகளை அனுபவிக்கப் பழகிக் கொள்வதற்காகவே இந்த சதஸ்களில் அவை ஏற்பாடு செய்யப்படுகின்றன.

"பக்தி பண்ணி விட்டு உடனே கைமேல் பலன் கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது தேங்காய் உடைத்து விட்டு ...

சூழ்நிலைகளை அடிக்கடி ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இந்த சதஸ்கள் ஒவ்வொருவருஷமும் ஒவ்வேரிடத்தில்நடக்கின்றன. இவை ஒரு வருஷம் நடந்த இடத்தில் மறுவருஷம் சிறிய அளவிலாவது அந்தந்த ஊர் மக்களால் நடத்தப்பட வேண்டும்.

# செக். கம்யூனிஸ்ட் தலைவர் டூப்செக் எதிர்காலம்?

பிராக், செப். 29

செக்கோஸ்லவாக்கிய அரசாங்கத்தில் ஏற்படவிருக்கும் புதிய மாறுதல்கள் பற்றி இன்று பகிரங்கமாக அறிவிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

செக்கோஸ்லவாக்கிய அரசாங்கம் ராஜினாமா செய்திருக்கின்றது. பிரதமமந்திரி திரு. செரனிக் புதிய அரசாகம் ஒன்றை அமைக்கவிருக்கிறார். திரு. டூப் செக் கம்யூனிஸ்ட் கட்சியின் 11 பேர் கொண்ட தலைமைப் பீடத்திலிருந்து விலக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றது.

செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப்பீடத்தில் பெரிய மாற்றங்கள் செய்யப்படலாம் என்று கருதப்படுகின்றது. திரு. டூப் செக் தாமே விலகிக்கொள்ளமறுத்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது திரு. செரனிக் தம் கருத்துக்களை மாற்றிக்கொண்டுவிட்டதாகவும் அவர் மீண்டும் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்கக் கூடும் என்றும் கூறப்படுகின்றது.

செக்கோஸ்லவாக்கியாவில் தாராளக் கொள்கைகளைக் கடைப்பிடித்து சோவியத்யூனியனின் கோபத்துக்காளான திரு. அலெக்சாண்டர் டூப் செக்கிற்கு செக்கோஸ்லவாக்கிய மக்கள் மத்தியில் நிறைய செல்வாக்கிருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

— —

## நியமனம்

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்தில் உள்ள வெள்ளாங்குளம் கிராமசேவையாளர் பிரிவில் கடமையாற்றிய திரு. ஏ எவ் கபூர் அகத்திமுறிப்பு கிராமசேவையாளராக இடமாற்றம் செய்யப்பட்டதிலிருந்து ஏறக்குறைய ஆறு மாத காலமாக வெள்ளாங்குளத்துக்கு கிராமசேவையாளர் இல்லாமலிருந்தது.

அப்பகுதிக்குக் கடந்த இரண்டு வருடகாலம் தற்காலிக வேலைநீக்கம்செய்யப்பட்டிருந்த திரு. கஸ்பார் சுளியாம்பிள்ளை வெள்ளாங்குளம் கிராமசேவையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்

## 24 மணி நேரத்தில் மீட்கப்பட்டது

சங்கானை, ஞாயிறு

களவாடப்பட்ட சைக்கிள் ஒன்று 24 மணி நேரத்தில் மீட்கப்பட்டது.

சில்லாலையைச் சேர்ந்த யேசுதாசன் பெரியவிளான் கிராமசேவகர் காரியாலயத்தில் தமது சைக்கிளை வைத்துப்பூட்டிவிட்டு கார்ணிவல் பார்க்கச் சென்று, திரும்பி வந்து பார்க்கையில் சைக்கிள் களவாடப்பட்டிருந்ததாகப்பெரியவிளான் கிராம சேவகருக்கும் பொலிசாருக்கும் புகார் செய்ததைத் தொடர்ந்து சங்கானைப் பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் திலகரத்தின, சிறிவர்த்தன ஆகியோர் களவாடப்பட்டதாகக்கூறப்படும் சைக்கிளுடன் இருவரைக் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். எதிரிகள் சுற்றவாளிகள் எனக் கூறவே நீதிபதி இவர்களைப் பிணையில் செல்லுமாறும் அடுத்த மாதம் 11-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## குடியரசு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

மக்கள் சீனக் குடியரசின் இருபதாவது நிறைவுவிழாவையொட்டி கூட்டமொன்று அடுத்த முதலாம் திகதி இலங்கை சீன நட்புறவுச் சங்க யாழ் கிளையின் ஆதரவில் நடைபெறவிருக்கின்றது.

திரு ஏ. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் திருவாளர்கள் க துரைரத்தினம் எம்பி, கே. கரவிட்ட எஸ் செந்தில்நாதன், இளங்கீரன், டானியல் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவர்

மக்கள் சீனக் குடியரசால் தயாரிக்கப்பட்ட 'இரு சகோதரிகள்' 'நடுச்சாமத்தில் சேவல் கூவுகிறது, ஆகிய இரு திரைப்படங்களும் விழாவில் காண்பிக்கப்படும்.

## சண்முகார்ச்சனை

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் கார்த்திகைத்திருவிழா இன்று மாலை 5 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகிறது. விசேஷபூசையும், சண்முகார்ச்சனையும், சங்கீதபூஷணம் திரு. ப. முத்துக்குமாரசாமி சர்மா குழுவினரின் விசேஷ இன்னிசைக்கச்சேரியும் விழாவில் இடம் பெறுகின்றன.

— —

## பௌத்தகாங்கிரஸ் கோரிக்கை

கோட்டை, ஞாயிறு

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றஇலங்கைத் தி. மு. கவின் கூட்டத்தில் இடம்பெற்ற சொற்பொழிவுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிரதமரைச்சந்தித்த அகில இலங்கை பௌத்தகாங்கிரஸ் அங்கத்தவர்கள் கேட்டுள்ளனர்.

இச்சொற்பொழிவுகள் குறித்துப்பிரதமருடன் பேச்சுவார்த்தைநடாத்திய மேற்படி அங்கத்தவர்கள் இ தி மு க அங்கத்தவரின் பேச்சுக்கள் நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் சீர்குலைத்து விடுமெனவும், பௌத்தர்கள் தங்களுக்கே ஆபத்து ஏற்படத்தக்க இந் பயமுறுத்தல்களைக் கேட்டுக் கொண்டு மௌனமாக இருக்கக்கூடாதெனவும்கேட்டுள்ளனர்.

## பாடசாலைக்கு மரவேலை உபகரணம்

பருத்தித்துறை, ஞாயிறு

வதிரிதிருஇருதயக்கல்லூரிக்குக் கல்விப்பகுதி 5000ரூபா பெறுமதியான மரவேலை உபகரணங்களை அனுப்பியுள்ளது இதன் காரணமாக இப்போதுள்ள மரவேலைக் கூடம் விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இன்னும் சில வாரங்களில் விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்கு 5,600 ரூபா பெறுமதியான பொருட்களும் விவசாயத்துக்கென 2000 ரூபா பெறுமதியான பொருட்களும் இக் கல்லூரிக்குக் கல்விப்பகுதி அனுப்பவிருப்பதாக அதிபர் திரு. தோமஸ் ஈப்பென் தெரிவித்தார்.



சென்னை, செப். 28

ஜனாதிபதி தேர்தலின் போது 'சின்டிகேட்' ஆதரவைப் பெற்ற திரு. சஞ்சீவரெட்டியை ஆதரித்தால் பிரதமமந்திரிப் பதவியைக் கொடுப்பதாக திரு. காமராஜர் உள்துறைஅமைச்சர் திரு. சவானுக்கு கூறியதாகவும் கட்சியின் நலனையும் தேசத்தின் நலனையும் உத்தேசித்துகட்சி வேட்பாளரான சஞ்சீவரெட்டியைஆதரிப்பதாகவும்பிரதம மந்திரிப் பதவி தமக்கு வேண்டாமென்றும் திரு. சவான் கூறிவிட்டதாகவும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ள திரு. சி சுப்பிரமணியம் வெளியிட்டுள்ளதிடுக்கிடும்செய்தி அரசியல் வட்டாரங்களில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே காங்கிரஸ் காரியக்கமிட்டி கூடியிருந்தால் கட்சியில் ஏற்பட்ட நெருக்கடி தீர்க்கப்பட்டிருக்கும் என்றும் ஆனால் அப்படி காரியக் கமிட்டி கூடுவதை திரு. காமராஜர் விரும்பவில்லை யென்றும் திரு. சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதி தேர்தலைத் தமது சொந்த நலனுக்குப் பயன்படுத்த முயன்றதாக காமராஜர் மீது திரு. சுப்பிரமணியம் குற்றம் சாட்டியிருக்கிறார்

மனச்சாட்சியின் படி வாக்களித்தவர்கள்மீது காரியக் கமிட்டியைக் கொண்டு நடவடிக்கை எடுத்து திருமதி இந்திரா காந்தியின் தலைமையை ஒழித்துக் கட்டிவிடக்கருதியதின் காரணமாகவே காமராஜர் காரியக் கமிட்டி ஜனாதிபதி தேர்தலுக்குமுன் கூடுவதை விரும்பவில்லையென்று திரு. சுப்பிரமணியத்தின் கருத்தை அறிந்தபின் சில அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

### காமராஜர்

திரு. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள கருத்துக்கள்பற்றி நிருபர்கள் திரு. காமராஜரைசந்தித்துக்கேள்விகள் கேட்டனர். தாம் எதுவும் சொல்வதற்கில்லை யென்று திரு. காமராஜர் கூறிவிட்டார்.

### அப்பட்டமான கற்பனையாம்

திரு. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள விஷயம் அப்பட்டமான வெறும் கற்பனையென்று 'சின்டிக்கேட்' தலைவர்களில் ஒருவரான திரு. பாட்டீல் கூறியிருக்கிறார். காமராஜர் தெரிவித்ததாகக கூறப்பட்டுள்ள விஷயம் பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாதென்றும் காமராஜரை சந்தித்தால் தான் இதுபற்றி அறிய முடியும் என்றும் திரு. பாட்டீல் கூறினார்.

### நிஜலிங்கப்பா ஆச்சரியம்

திரு. சுப்பிரமணியம் தெரிவித்துள்ள கருத்துக்கள் தமக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கூறியிருக்கிறார். காமராஜர் பிரதம மந்திரிப்பதவியைச்சவானுக்குக் கொடுக்க முன்வந்தார் என்ற செய்தி திரு. சுப்பிரமணியத்தின் வெறும் கற்பனையாக இருக்க வேண்டுமென்று திரு. நிஜலிங்கப்பா கூறினார். தமிழ்நாடு பிரதேச காங்கிரஸ் கமிட்டியில் இருந்து வந்த கருத்து வேற்றுமைகளைப் பற்றி குறிப்பிட்ட திரு. நிஜலிங்கப்பா நிலைமையைச் சமாளிக்க முடியாமல் திரு. சுப்பிரமணியம் ராஜினாமா செய்திருக்கக் கூடும் என்று கூறினார்.

### பிரதமர் விஜயம்

திரு. சுப்பிரமணியம் ராஜினாமா செய்ததாலும் தமிழ் நாடு சட்டசபைக் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. கருத்திருமன் பிரதம மந்திரி விஜயத்தை ஒத்திப்



போடும்படி கேட்டிருப்பதாலும் திருமதி காந்தி இப்போதைக்குத்தமிழ்நாடுவராமல் விட்டு விடக் கூடும் என்று கருதப்படுகின்றது.

திரு. சுப்பிரமணியம் தமிழ்நாடு காங்கிரஸ் பிரமுகர்களைக் கலக்காமலே பிரதமரின் விஜயத்துக்கு ஏற்பாடு செய்ததாகவும் கட்சியின் செல்வாக்கை இழந்துவிட்ட திரு. சுப்பிரமணியம் பிரதமர் விஜயத்தின் மூலம் மீண்டும் தாம் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சி எடுப்பதாகவும் திரு. கருத்திருமன் கூறியிருக்கிறார்.



## அரை லட்சம் பேர் தோற்றுவர்

கோட்டை, திங்கள்

கல்வியமைச்சிலும் ரோயல் கல்லூரியிலும் 20 கல்வி நேர்முகப் பரீட்சை சபைகள் நேற்று ஆசிரியர்கள் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சையை ஆரம்பித்துள்ளன.

ஆசிரியர் பதவிகளுக்காக விண்ணப்பித்த அரை லட்சம் விண்ணப்பதாரிகள் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள். அரசாங்க பாடசாலைகளில் உள்ள 9000 வெற்றிடங்கள் இந்நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யும் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போதனை ஆரம்பித்த பின்னர் நாட்டில் ஆங்கிலக் கல்வியின் தரம் குறிப்பிடக் கூடிய அளவு தரம்குறைந்திருப்பது உண்மை. ஆங்கில மொழிமூலம் கல்விபோதிக்கப்பட்ட காலங்களில் சகல வேலைகளும் ஆங்கில மொழியில் செய்யப்பட்டன. ஆங்கில மொழியின் பாவனை அதிகமாக இருந்த காரணத்தால் அதன் தரமும் உயர்ந்து காணப்பட்டது, ஆனால் சுயமொழி மூலம் கல்விப் போதனை ஆரம்பமாகியபின்னர் ஆங்கிலம் ஓர் இரண்டாம்பாடமாகவும், விருப்பத்துக்குரிய ஒரு பாடமாகவுமே எல்லாப்பாடசாலைகளிலும் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதன்காரணமாகவே இன்று ஆங்கிலத்தின் தரம் குறைந்துள்ளது, ஆசிரியர்கள் கவலையீனமாக இருப்பதால் ஆங்கில அறிவு குறைந்துவிட்டதாகக் கூறுவதில் அர்த்தமில்லை'.

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய பாடசாலைக்கலைவிழா நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய உடுவில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். இராசா மேற்கண்டவாறு கூறினார். வித்தியாலய அதிபர் திரு. வி. ஜி. சம்பந்தன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

கூறியதாவது:-

மாணவர்களின் வளர்ச்சியில் பெற்றோரும் ஊக்கம் காட்டவேண்டும். தம்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பினால் மட்டும் போதாது. வீட்டிலும் அவர்கள் படிப்பில் ஊக்கம் செலுத்த உற்சாகமூட்டவேண்டும். ஆங்கிலத்தின் அவசியத்தை பெற்றோர்கள் உணர்ந்துள்ளனர். அதன்வளர்ச்சிக்கு அவர்கள் ஆதரவளிக்கவேண்டும்.

மாணவர்கள் பாடசாலைப் புத்தகங்களை மட்டும் படித்தால் காணாது. பொதுஅறிவு மாணவர்களிடம் மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. இவற்றை நீக்க ஒரேவழி நிறைய புத்தகங்களை வாசிப்பதாகும். மாணவர்கள் தமது கிராமத்தில் உள்ள வாசிகசாலைகளுக்குச் சென்று நல்ல புத்தகங்களை வாசிக்கவேண்டும்.

கலைவிழாவில் பிரதமபகுதி மாணவர்களின் அபிநயப் பாட்டு, ஆங்கில அபிநயப் பாட்டு, இசைநடனம், ஆங்கிலப் பேச்சு மற்றும் பாடசாலைமாணவர்களால் தயாரிக்கப்பட்ட 'நூற்றாண்டில்', 'இறுதித்தீர்ப்புநாள்', 'பெருவிரல்' ஆகிய நாடகங்களும் இடம்பெற்றன.

பிரதம பகுதிஅதிபர் திரு. எஸ். சுவாமிநாதஐயர் சகலருக்கும் நன்றிதெரிவித்தார்.

## கொடிஅமைப்புப்பற்றி சுயாட்சிக்கழகம் ஆலோசனை

மண்டைதீவு, ஞாயிறு

தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் கழகத் தலைவரான ஊர்காவற்றுறை எம். பி. திரு திரு. வ. நவரத்தினம் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. காலை 10 மணிக்கு ஆரம்பமாகிய இக் கூட்டம் பி. ப. 3-30 மணி வரை தொடர்ந்து நடந்தது. கழகத்தின் கொடி அமைப்பு பற்றி நீண்ட நேரமாக விவாதிக்கப்பட்டது.

கழகக் கொடி மூவர்ணமாக இருக்கவேண்டுமெனப் பலர் கருத்துத் தெரிவித்தனராயினும் கொடிபற்றிய இறுதி முடிவு மக்கள் அபிப்பிராயம் அறிந்து அதன்பின் அடுத்த செயற்குழுவில் எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வடபகுதி வெங்காய உற்பத்தியாளர்களின் குறைகளைப் போக்கக் கட்டுப்பாட்டு விலையை உயர்த்த வேண்டுமெனவும், வெங்காயத்தைக் கொண்டுசெல்ல ஆணையிறவில் இருக்கும் தடை உத்தரவை நீக்க வேண்டுமெனவும், அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமும், பொதுத்தராதரப் பரீட்சையில் இரண்டாம் முறையாகச் சோதனை எடுப்பவர்களின் நன்மைக்காக ஆண்டுக் கிடைநடுவே ஒரு சோதனை நடத்தவேண்டுமென்று கல்வி இலாகாவைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. இக் கூட்டத்திற்கு 13 செயற்குழு உறுப்பினர்களில் 10 பேர் கலந்துகொண்டனர். கிழக்கு மாகாணத்திலிருந்தும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

———

## சமாச விழா

முசலி, ஞாயிறு

மாந்தை மேற்கு உயிலங்குளம் கிராமச்சபை தனது எல்லைக்குள் இருக்கும் சனசமூகநிலையங்களைகொண்டு ஒரு சமாச விழாவை வார இறுதியில் கொண்டாடுவதற்குத் தீர்மானித்துள்ளது. இந்த விழாவில்மாட்டு வண்டிச்சவாரி, சைக்கிள் ஓட்டம், கலைநிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

காற்றும், நீரும் இல்லாமல் நான் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அந்தப் பரம்பொருள் இல்லாமல் நான் இருக்கமுடியாது. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதி மாதம் 13-ந் திகதி (29 - 9 - 69)


## திரு சுப்பிரமணியம் ராஜினமா

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியை திரு. சி. சுப்பிரமணியம் திடீரென்று ராஜினமா செய்துவிட்டார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களுக்கிடையில் சில காலமாகவே பகிரங்கமாக வேறுபாடுகளும் மோதல்களும் இருந்துவந்ததை அறிந்தவர்களுக்கும் எந்தப் பதவியையும் எந்தச் சமயத்திலும் உதறித்தள்ளும் மனப்பான்மையுடைய திரு சுப்பிரமணியத்தைத் தெரிந்துகொண்டவர்களுக்கும் திரு. சுப்பிரமணியத்தின் இந்த ராஜினமா அதிர்ச்சியளித்திருக்கமுடியாது. தமிழ்நாடு சட்டசபைக் காங்கிரஸ் தலைவர் திரு. பி. ஜி. பி. கருத்திருமன், திரு. சுப்பிரமணியம் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியை துறந்துவிட வேண்டுமென்றும் இல்லையேல் அவரை வெளியேற்றவேண்டியேற்படுமென்றும் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்திருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிளவும் வேற்றுமையும் சரிசெய்யமுடியாத அளவுக்கு மோசமாகி பிறர் எள்ளி நகையாடும் அளவுக்கு வந்துவிட்டபின்னரும் தலைவர் பதவியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிராமல் உதறித்தள்ளியது திரு. சுப்பிரமணியத்தைப் பொறுத்தவரையில் சரியான நியாயமான செயல்தான்.

தமது ராஜினமாவுக்கான காரணம் பற்றி பத்திரிகை நிருபர்களிடம் திரு. சுப்பிரமணியம் பேசும்போது அதிர்ச்சியளிக்கும் சில உள் ரகசியங்களையும் வெளியிட்டிருக்கிறார். சென்ற சில வாரங்களாக காங்கிரசுக்குள் நடைபெற்றுவரும் சம்பவங்கள் வேதனையளித்திருப்பது மட்டுமல்ல சலிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறதென்று அவர் கூறியது ஒன்றும் ஆச்சரியமான விஷயமில்லைத்தான். ஆனல் திருமதி இந்திராகாந்தியை பதவியில் நடைபெற்றதும் மறந்துவிட்ட சம்பவங்களல்ல.

பங்களூர் காங்கிரஸ் மகாநாட்டில் வங்கிகளை தேச உடைமையாக்குவது உட்பட 19 அம்சங்களைக்கொண்ட பொருளாதாரத்திட்டமொன்றைப் பிரதமர் இந்திரா சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றதும் ஜனதிபதி தேர்தலில் தமது விருப்பத்துக்கு மாருக 'சிண்டிகேட்' குழுவினர் ஓர் அபேட்சகரை காங்கிரஸ் சார்பில் நிறுத்துவதில் வெற்றியீட்டியது மட்டுமல்லாமல் 'சிண்டிகேட்' குழுவினர் பலப்பல அறிக்கைகள் விடுத்தும் மிரட்டல்பேச்சுப் பேசியும் பிரதமரின் அந்தஸ்துக்கே சவால் விடுத்ததால் ஆத்திரமடைந்து இந்திரா நடந்துகொண்டமுறையும் திரு. காமராஜர் உட்பட காங்கிரஸ் மேலிடமான 'சிண்டிகேட்' குழுவினருக்கு ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனலும் பிரதமர் இந்திராவின் திட்டங்களுக்கும் செயல்களுக்கும் உள்துறை மந்திரி சவான் பூரண ஆதரவும் ஒத்துழைப்புமளிக்கிருர். குமுறிக்கொண்டிருந்த மகாராஷ்டிரபிரதேசக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இந்திராவின் கொள்கையை ஆதரிக்க வேண்டுமென்று பேசி வெற்றி வீரனுக சவான் வந்தது மட்டுமல்ல அந்தக் கூட்டம் இதர பிரதேச காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் முன்மாதிரியாகத் திகழும்படி செய்திருக்கிருர். இந்திராவின் திட்டங்களையும் செயல்களையும் இந்திய மக்கள் முழுமனதுடன் ஆதரிக்கிருர்கள்; ஒத்துழைக்கத் தயாராக இருக்கிருர்கள். ''இந்தியாவில் கம்யூனிஸம் தலையெடுப்பதையும் தீவிர வலதுசாரிப் புரட்சி ஏற்படுவதையும் இந்திராவின் நடவடிக்கை தடுத்திருக்கிறது'' என்று இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் பாராட்டியிருக்கிருர்.

## செனட்சபையிலே:

நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம்

# தமிழ் டாக்டர்களிடம் மன்னிப்புக் கோருகிருர்

மந்தகதியில் சென்று கொண்டிருந்த செனட்சபை விவாதம் இறுதிக் கட்டத்தை அடையும் தறுவாயில் புதிய விறுவிறுப்பையும் வேகத்தையும் பெற்றிருக்கிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செனட்டர் ஜேசுதாசனும், தமிழரசுக்கட்சிச் செனட்டர் நடராசாவும் தமிழில் பேசி முறையே மலையகத் தமிழர்களினதும் வடக்கு மாகாணத் தமிழர்களினதும் பிரச்னைகளைக் குறிப்பாகவும், தமிழ் மக்களின் பிரச்னைகளைப் பொதுவாகவும் எடுத்துரைத்தனர் என்ருலும் வழக்கம்போல செனட்டர் டாக்டர் ஆர். பி. லெனேராதான் இன்றைய செனட சபை விவாதத்தைக் களைகட்ட வைத்தார்.

ஆயுர்வேத வைத்திய முறையிலும் மேலைத்தேய வைத்திய முறையிலும் நன்கு தேர்ச்சிபெற்றவர் டாக்டர் லெனேரா, 'சொல்லுக சொல்லை அச்சொல்லை வெல்லும் சொல்லின்மை அறிந்து' என்பதற்கொப்ப, எதிர்க்கட்சிச் செனட்டர்களைச் சாடுவதில் தனிச் சிறப்புப் பெற்றவர். அதே நேரத்தில் தனதுகட்சியைச் சேர்ந்தவர் என்ருலும் சொல்லக் கூடாதவற்றைச் சொன்னல் அதனைத் தட்டிக் கேட்டுக் கண்டிக்கத் தயங்காதவர்.

### தமிழ் டாக்டர்களும் கர்ப்பத் தடையும்

இதனுல்தான் 'தமிழ்டாக்டர்கள் சிங்களப் பெண்களுக்கோ, ஆண்களுக்கோ கர்ப்பத்தடை செய்து சிங்கள மக்களின் எதிர்ப்பையும் விரோதத்தையும் சம்பாதித்துக் கொள்ளாதீர்கள்' என்று செனட்டர் பெதிரிஸ் சில நாட்களுக்கு முன் செனட் சபையில் விடுத்த வேண்டுகோளை 'மகாகேவலமான வேண்டுகோள், யாருமே வெட்கப்பட வேண்டிய-வேதனைப்பட[illegible]வேண்டிய பேச்சு' என்[illegible] வன்மையாகக் கண்டித்து இப்படியானதொரு குற்றச்சாட்டை வெளிப்படுத்தியதற்காக 'தமிழ் டாக்டர்களிடமும் தமிழ்ப் பெ[illegible]க்களிடம் மன்னிப்பு தாலென்ன சிங்களவனுக இருந்தாலென்ன எவனுக இருந்தால் என்ன அவன் டாகடர்தான். கௌரவமானவன்தான்' என்று ஒரளவு துக்கமும், துயரமும், வெட்கமும், வேதனையும் மேலிடச் சொல்லியடாக்டர் லெனேரா, இப்படிக் கௌரவமானவர்களுக்கு இழுக்குத் தேடித் தரக்கூடியவகையில் பேசியதற்காக வெட்கப்படுவதாகக் கூறி, மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அவரது புகழ் ஒருபடி உயர்ந்தது.

### எதிர்க்கட்சிக்குச் சாட்டையடி

டாக்டர் லெனேராவுக்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி-முக்கூட்டு முற்ருகப் பிடிக்கவில்லை. 'ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி' என்ற பெயரிலுள்ள 'சுதந்திர'த்தையே 'சீனர்களுக்கும் ரஷ்யர்களுக்கும் அடகு வைக்கத்தான்' ல. ச. ச. க.யும், கம்யூனிஸ்ட்கட்சியும் முயலுவதாகவும், இடதுசாரிக்கட்சிகளின் துணையுடன் ஆட்சியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கைப்பற்றினலும் சிறிமாவோவை ஆட்சி செலுத்த அவர்கள் விடமாட்டார்கள் என்றும் கூறி தனது இந்த எச்சரிக்கைக்கு ஆதரவாக லங்கா சமசமாஜக்கட்சியினரின் ஞானகுருவான டிராட்ஸ்கியை, ஸ்டாலிசவாதிகள் கொலைசெய்த கதையைக் கட்டவிழ்த்துவிட்டார்.

'ஆட்சியைக் கைப்பற்ற பேய்களுடனும் கூட்டுச்சேரத் தயார்' என்று கொக்கரித்த பண்டாரநாயக்காவுக்கு என்ன கதி நடந்தது தெரியும்தானே என்று ஸ்ரீ ல. சு. க. செனட்டர் ஹமீமிடமே, கேட்டுவிட்டு 'சௌ சௌ'க்கும் (சூ-என்-லாய்) 'மௌ மௌ'க்கும் (மா-சே-துங்) மாஸ்கோவுக்கும் நாட்டை அ[illegible]கு வைக்க விரும்புவோ[illegible]ன் உறவை சிறிமாவோ பண்டாரநாயக்கா கொள்வது [illegible]த்தான விளைவைக் கொடுக்கும் என்று 'புத்திமதி' கூறினர் டாக்டர் லெனேரா!

இல்லையா? இலங்கையில் சட்டப்படிப்பு இல்லையா? இரிய கொல்லையின் மகளைப் பக்கத்திலுள்ள இந்தியாவுக்கு அனுப்பினல் மட்டும் கூக்குரலிடுவது ஏன்?', என்று கேள்விமேல் கேள்வி கேட்கத் தவறவில்லை.

### இடதுசாரிகளின் பதவிமோகம்

கிழவனை மணந்த இளம் வயதுப் பெண்ணொருத்தி, கள்ளக் கணவனுடன், கொஞ்சிக் குலவி குதூகலித்திருந்தபோது. திடீரென வந்துவிட்ட 'கிழட்டுக் கணவனை' வாசலுக்கு ஓடோடிச்சென்று வரவேற்று அவனது கண்ணைப்பொத்தி விளையாடினளாம்! கிழட்டுக் கணவனின் கண்ணைப் பொத்தி விளையாடியது, அவன்மேல் கொண்ட பாசத்தினல் அல்ல, கள்ளக் கணவனுக்கு கொல்லைப்புற வாசலால் தப்பியோட அவகாசம் கொடுக்கத்தானும்!

இதனை நான் சொல்லவில்லை. டாக்டர் லெனேராதான் சொன்னர். இதனைப்போல இன்னும் பல 'ரசமான குடும்பக் கதைகளையும் சொன்னர். இந்தப் பருவப்பெண்ணின் பாசாத்தைப்போலத்தான் 'மதம் மக்களுக்கு அபின்' என்று சொன்ன இடதுசாரியினரான செனட்டர் டொரிக்டிசூசாவும், செனட்டர் ஹமீமும், தலதா மாளிகாவுக்கும் கோயில்களுக்கும் சென்று வழிபடுவதும் என்று நையாண்டிசெய்த டாக்டர் லெனேரா, பதவி மோகத்தினல்தான் — மக்களை ஏமாற்றும் ஆட்சியைக் கைப்பற்றத்தான் இப்படிக் 'கபட நாடகம்' ஆடுகின்றனர் எதிர்க்கட்சியினர் என்று சாடினர்.

### இ. தி. மு. கா.வும் இ. தொ. கா. வும்

காலையில் பேசிய செனட்டர் ஜேசுதாசன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதி இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் ஏ. இளஞ்செழியன் யாழ்ப்பாண மாநில

## செய்திச் சுருக்கம்

### இந்திய உதவியுடன் புதிய ஜவுளி ஆலை

இரத்தினபுரியில் அரசாங்கம் பெரியதொரு ஜவுளி ஆலையை நிறுவத்திட்டமிட்டுள்ளது. இங்குள்ள குருவிற்ற பெரடைஸ் பகுதியில் நிறுவப்படவிருக்கும் இவ்வாலைக்குத் தேவையான நிலப்பரப்பை அரசாங்கம் இப்பகுதியில் ஒதுக்கியுள்ளது எனவும் நவீன முறையில் இந்தியாவின் உதவியோடு புடவைகள் உற்பத்தி செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

### உபகுழுவின் அங்கீகாரம்

செறிவான நெற்பயிர்ச் செய்கையை நாட்டின் குடியேற்றத் திட்டங்களில் ஊக்குவிப்பதற்கு காணிவிவசாய அமைச்சு கொண்டுவந்த திட்டத்தை அமைச்சர்சபையின் உபகுழு அங்கீகரித்துள்ளது.

0 0 0

### வெள்ளைவாரணனர் அழைக்கப்படுகிருர்

காரைதீவில் நடைபெறவிருக்கும் விபுலானந்தர் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள வெள்ளைவாரணனர் விழாக் குழுவினரால் அழைக்கப்பட்டுள்ளார்.

விழாக்குழுத்தலைவர் திரு. எம். பரசுராமன் வெள்ளைவாரணனுக்கு எழுதிய அழைப்புக் கடிதத்தில் விபுலானந்த அடிகளாரின் சிறந்தமாணுக்கரில் ஒருவரான அவர் விபுலானந்த அடிகளின் விழாவில் பங்குபற்றி அவ்விழாவைச் சிறப்பிக்கவேண்டுமெனக் கேட்டு எழுதியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

## ஆண்டவனை அடைய மனத்தூய்மை வேண்டும்

அல்லைப்பிட்டி, சனி

''கடவுளை அடையவேண்டுமாயின் ஒருவன் தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ளுதல்வேண்டும். அன்பினலும் அகிம்சையினலும் உலகத்தையே ஆளமுடியுமென்ற கொள்கையை எமக்கு உணர்த்தியவர் மகாத்மா. நாம் இன்று இந்நாட்டில் சுதந்திரமாக இருப்பதற்குக் காரணம் அவரது விடாமுயற்சியே என்பது தெரியவருகிறது. எமக்கு எந்தத் துன்பம்வந்தாலும் அதை உதறித்தள்ளிவிட்டு மகிழ்ச்சியுடன் இருக்கப் பழகிக்கொள்ளவேண்டுமென்ற உண்மையை விளக்கியவர் மகாத்மா. அவரின் நினைவு தினங்களை நாம்கொண்டாடுவது மட்டும் போதாது. காந்திஜியின் வாழ்க்கை வழிகளை பின்பற்றுதல் வேண்டும்.''

மேற்கண்டவாறு வேலணையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் செல்வி பண்டிதை கந்தையா குறிப்பிட்டார்.

செல்வி கந்தையா மேலும் பேசுகையில் இன்று நம்மில் பலர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதங்களைப் பாராட்டி வருகின்ருர்கள். மகாத்மா ஹரிசனர்களுடன் ஒன்ருகவேயிருந்து உணவருந்தி அவர்களும் எம்மைப் போன்றவர்களே என்ற உண்மையை மக்களுக்கு உணர்த்தியுள்ளார். அவர் இன்றிருந்தால் இப்படிப்பட்ட சாதி பேதங்கள் தலைதூக்கியிருக்க முடியுமா? மகாத்மா ஒருவரைத் தாழ்ந்தவரென்ருே, உயர்ந்தவரென்ருே வேற்றுமை பாராட்டியதில்லை எல்லோரும் ஆண்டவனின் பிள்ளைகள் என்ற கருத்தையுடையவர் அவரின் வழிகளை நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும் என்ருர். வேலணை மத்தியகல்லூரி அதிபர் திரு ஜே. ஏ. அரியரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

## 'உகந்தவகையில் ஒதுக்கிய நிதியைச் செலவிடுங்கள்'

திருக்கோணமலை, ஞாயிறு

''ஒரு நிதி ஆண்டிற்கான பண ஒதுக்கீட்டை வருட முடிவிற்குள்ளேயே நாட்டின் தேவைகளுக்காக உபயோப்பதை விட்டு அதைப் பாதுகாத்துச் சேமித்து வைத்தல் ஆகாது. நிதியை உபயோகிக்காது சேமித்து வைப்பதால் நாடு முன்னேற முடியாது. உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் இந்த உண்மையை உணர்ந்து அதற்கேற்ப செயலாற்ருது விட்டால் எந்தக் காரணத்திற்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டதோ அந்தக் காரணமே கருத்தற்றதாகிவிடும்.''

இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்தில் திருக்கோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்காகக் கூட்டப்பட்[illegible] நாட்டின்போது திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சோமபாலா குணதீரா குறிப்பிட்டார்.

குறிப்பிட்டகால கால எல்லைக்குள் ஒதுக்கப்பட்ட நிதியை உகந்த வகையில் செலவிடுவதற்காக உள்ளூராட்சி மன்றங்கள் தத்தம் வேலைகளுக்கான நிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்து செயலாற்றவேண்டும் எனவும் அரசாங்க அதிபர் எடுத்துக் கூறினர். கிராமசபைகளின் 3 தலைவர்களும் பங்கு பற்றிய இந்த மகாநாட்டை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டி. வாமதேவன் ஒழுங்கு செய்திருந்தார்.

## 'பாதுகாப்பு நீங்களாகவே தேடிக்கொள்ளுங்கள்'

### பொதுமக்களுக்கு பொலிஸார் வேண்டுகோள்

மட்டுவில், ஞாயிறு

''திருடர்கள் உங்களுடன் கூடவே நண்பர்களைப்போல் நடித்துக்கொண்டு நோட்

## திருட்டுவழக்கில் தீர்ப்புஒத்திவைப்பு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கள் வேதனையளித்திருப்பது மட்டுமல்ல சலிப்பையும் ஏற்படுத்துகிறது என்று அவர் கூறியது ஒன்றும் ஆச்சரியமான விஷயமில்லைத் தான். ஆனல் திருமதி இந்திராகாந்தியை பதவியில் இருந்து இறக்குவதற்கு வலதுசாரி 'சிண்டிகேட்' குழுவுக்கு உள்துறை மந்திரி திரு. சவான் உதவியளித்தால் அவரைப் பிரதமராக்குவதாக திரு. காமராஜ் உறுதி கூறியதாகவும் இதை திரு. சவான் மறுத்துவிட்டதாகவும் திரு. சுப்பிரமணியம் வெளியிட்ட தகவல் அதிர்ச்சியளிக்கக் கூடியது தான். திரு. சவானை பிரதமராக்குவதாக திரு. காமராஜர் உறுதியளித்தது உண்மையானல் இந்திரா காந்தியை பிரதமர் பதவியில் இருந்து அகற்றுவதற்குக் காங்கிரஸ் மேலிடம் சதி செய்தது என்ற கூற்றில் உண்மையில்லையென்று கூற முடியுமா? ஜனதிபதி தேர்தல் சமயத்திலும் வங்கி களைத் தேசஉடைமையாக்க இந்திராகாந்தி எடுத்த நடவடிக்கைகளின் போதும் காங்கிரஸ், 'சிண்டிகேட்' குழுவினர் 'கட்சிக் கட்டுப்பாடு', 'ஒழுங்கு' என்றெல்லாம் பேசியது இந்திராவை வெளியேற்றி அந்த இடத்தில் தமக்கேற்ற ஒருவரை அமர்த்தும் உள்நோக்கத்துடன் தான் என்று கருதுவதில் தவறிருக்கமுடியுமா? ஜனதிபதி தேர்தலில் ''மனச்சாட்சிப்படி வாக்களிப்போம்'' என்று பிரதமர் இந்திரா கூறியதுதான் மணிப்பூரில் காங்கிரஸ் மந்திரிசபை கவிழ்வதற்குக் காரணம் என்றும் இனியும் கட்சிக் கட்டுப்பாடு மீறப்படுவதை அனுமதிக்க முடியாதென்றும் காங்கிரஸ் அக்கிராசனர் நிஜலிங்கப்பா கூறியிருக்கிருர். பங்களூர் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்குமுன்னர், ஜனதிபதி தேர்தலில் 'மனச்சாட்சிப்படி வாக்களிப்போம்' என்று கூறப்படுவதற்கு முன்னரே பஞ்சாப், ஹரியாணு, ராஜஸ்தான், பிகார், ஒரிஸா மற்றும் வட இந்திய ராஜ்யங்கள் பலவற்றில் காங்கிரஸ்காரர்கள் பலர் அடிக்கடி கட்சி மாறி காங்கிரஸ் மந்திரிசபைகள் கவிழ்ந்ததும் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தி பின்னர் உபதேர்தல்கள் நடத்தப்பட்டதையும் தீவிர வலதுசாரிப் புரட்சி ஏற்படுவதையும் இந்திராவின் நடவடிக்கை தடுத்திருக்கிறது'' என்று இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் பாராட்டியிருக்கிருர்.

இந்திராவின் உறுதியான துணிச்சலான நடவடிக்கைகள் இந்தியாவில் காங்கிரஸ் இழந்து வந்த செல்வாக்கைத் தடுத்து காங்கிரஸ்மீது மக்கள் மீண்டும் நம்பிக்கை வைக்கவும் ஆதரவுகாட்டவும் வழி வகுத்திருக்கிறது.

காங்கிரசின் நலனை அதாவது கட்சிநலனை விட தேசத்தின் நலன் தான் பெரிது இந்திராவைப் பொறுத்தவரையில் தேசத்தின் நலனேயும் காங்கிரஸ் கட்சியின்நலனேயும்காப்பாற்றியிருக்கிருர். மக்களின் பேராதரவையும் அன்பையும் பெற்றிருக்கிருர்.

தேசத்தின் நலனேயும் காங்கிரசின் நலனேயும் விட சொந்த நலனும் கௌரவமும்தான் பெரிது என்று (திரு சுப்பிரமணியம் நாசூக்காகக் குறிப்பிட்டிருப்பது போல) 'சிண்டிகேட்' குழுவினர் கருதுவார்களானல் அவர்கள் காங்கிரசுக்கும் தேசத்திற்கும் மட்டுமல்ல தங்களுக்குமே தீமை செய்தவர்களாவர்.

சொந்த நலனேயும், கட்சி நலனேயும் விடுத்துமக்களின் நலனேயும் தேசத்தின் நலனேயும் கருத்தில் கொண்டு காங்கிரஸ் மேலிடத்தவர்கள் நடந்து கொள்ளத் தவறினுல் பழம் பெரும் தேசபக்தர்களின் பெயருக்கு இழுக்குத் தேடாமலும் அவர்களது ஆத்மாவுக்கு வேதனேயளிக்காமலும் காந்திஜி கூறியதுபோல இப்போதாவது காங்கிரஸைக் கலைத்து விடமுன்வருவது தான்விவேகம்.

ஏனெனில் இலங்கை உட்பட ஆசிய நாடுகளுக்கு விடுதலை கிடைப்பதற்கு வழி காட்டிய இந்தியா, அந்த விடுதலையைப் பாதுகாக்கவும் வழிகாட்ட வேண்டுமென்பதில் இலங்கைமக்களுக்கும் அக்கறையிருக்க நியாயமுண்டு


**32 ஏக்கர் நெற்காணி விற்பனைக்கு**

பரந்தனிலிருந்து 8 1/2 மைல் தொலைவில் விரைவில் திருத்தும் குளத்தின் கீழ் விளைச்சலுள்ள காணி, மலிவு விற்பனைக்குண்டு. விளம்பர இல: 1765, ஈழநாடு மே/பா, யாழ்ப்பாணம். 1765



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


ரான் அவர் விபுலானந்த அடிகளின் விழாவில் பங்கு பற்றி அவ்விழாவைச் சிறப்பிக்கவேண்டுமெனக் கேட்டு எழுதியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

## வேலை இல்லை ஆனல் சம்பளம்

கொழும்புத் துறைமுகத்தில் 1500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கப்பல் வராத காரணத்தால் இம் மாதம் முழுவதும் வேலையின்றியிருந்தனர். இவர்கள் வேலைசெய்யாதிருந்தபோதிலும் இவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவிருக்கிறது.

0 0 0

## 76,000 ஏக்கரில் ஐ. ஆர்-8

1970-ம் ஆண்டில் 76,000 ஏக்கர் நிலப்பரப்பில் அதிசய விதைநெல்லான ஐ. ஆர்-8 நெல்லை விதைப்பதற்கு காணி விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது. 15,000 ஏக்கரில் மட்டுமே இவ்வருடம் இந்நெல் விதைக்கப்பட்டது. வரண்டபகுதியில் இந்நெல் நல்ல பலனைக்கொடுத்ததைத் தொடர்ந்தே அமைச்சு மேற்படி நடவடிக்கையை எடுக்கத்தீர்மானித்துள்ளது.

0 0 0

## டிரினிடாட் செல்லும் இலங்கைகோஷ்டி

டிரினிடாட்டில் அக்டோபரில் சாம்ராஜ்ய ஆட்சிமன்றச்சங்கத்தின் மகாநாடு நடைபெறவிருக்கிறது. இச்சங்கத்தின் இலங்கைக் கிளையின் சார்பில் இம்மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. பெர்ணுட் சொய்சா தலைமையிலான கோஷ்டியொன்று செல்லவிருக்கிறது.

0 0 0

## இலவச நூல்விற்பனை பற்றி புகார்

அரசாங்கம் வறிய மாணவர்களுக்கு வழங்குவதற்கென கொடுத்த இலவச நூல்களைச் சில பாடசாலைகளின் அதிபர்கள் விற்பனை செய்கிருர்கள் எனக் கல்வி இலாகாவுக்குப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதைத்தொடர்ந்து கல்வியமைச்சின் பிராந்திய வித்தியாதிபதிகள் இரகசிய பரிசீலனை நடத்திவருகிருர்களென கல்வியமைச்சைச் சேர்ந்த நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பட... வேண்டிய பேச்சு' என்று வன்மையாகக் கண்டித்து இப்படியானதொரு குற்றச்சாட்டை வெளிப்படுத்தியதற்காக 'தமிழ் டாக்டர்களிடமும் தமிழ்ப் பெ...க்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்' டாக்டர் லெனேரா.

'கையில் ஒரு குழந்தையையும், சருப்பையில்இன்னெரு குழந்தையையும் சுமந்து கொண்டு, சேலைமுனையைப் பிடித்துக் கொண்டு மூன்ருவது குழந்தை தொங்க வரும் தாய்மார்களை' நாளாந்த வாழ்க்கையில் சந்திக்கும் டாக்டர் லெனேரா குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை உற்சாகமாக வரவேற்பவர்.

செனட்டர் பெதிரிஸ், டாக்டர்களைக்கூடத் தமிழர் சிங்களவர் என்று பாகுபடுத்திப் பேசுவதைக் கண்டித்து 'டாக்டர் பட்டம் பெற்றவன் தமிழனுக இருந்து வைக்க விரும்புவோ...ன் உறவை சிறிமாவோ பண்டாரநாயக்கா கொள்வது ஆபத்தான விளைவைக் கொடுக்கும் என்று 'புத்திமதி' கூறினுர் டாக்டர் லெனேரா!

கூட்டாட்சிக் கட்சியினர், குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஆங்கிலம் வேண்டாம் என்று பிரச்சாரம் செய்துவிட்டு பண்டாரநாயக்காவின் ஒரு புதல்வியைப் பாரிஸ் நகருக்கும், இன்னெரு புதல்வியை லண்டன் மாநகருக்கும் அனுப்பிவிட்டு இப்போது ''டெயிலி மிரர்'' பத்திரிகையை ஆதாரமாகக்கொண்டு அனுரா பண்டாரநாயக்காவைச் சட்டம் படிக்க லண்டனுக்கு அனுப்பப்போவதாகச் சொன்ன டாக்டர் லெனேரா, ''ஏன் இலங்கையில் சட்டக் கல்லூரி

கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதி இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் ஏ. இளஞ்செழியன் யாழ்ப்பாண மாநில மாநாட்டிலே பேசியதாகச் சில ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள பேச்சை அடிப்படையாக வைத்துக்கொண்டு இ. தி. மு. காவைத் தாக்கித் தள்ளினுர்.

''இந்த நாட்டிலே இ. தி. மு. க. என்பது ஒரு பெரிய ஜோக்கூத்தாகி விட்டது. மலையகத்திலே பேச மேடை கிடைக்காததால்தான், யாழ்ப்பாணத்திலே போய், மலையக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் போகிருேம்'' என்று பேசவேண்டியிருக்கிறது என்று சொன்னுர் யேசுதாசன்.

# ''இந்தநாட்டில் தமிழர் சம உரிமையுடன் வாழச்சிங்கள மக்களுடன் ஒத்துழைக்க வேண்டும்'

**— வவனியா எம். பி.**

புலோலி, ஞாயிறு

நம்நாட்டிலேவேலையில்லா பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. சிறிமாவோ ஆட்சிக்கு முன்பும் வேலையில்லாப் பிரச்னைஇருந்துவந்தது. ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரிகள் அன்று தொட்டு இருந்துலந்தார்கள் சிறிமாவோ ஆட்சிக் காலத்தில் சிங்கள மக்களிடையே வேலையில்லாதவர்களுக்கு பெரும்பாலும் வேலைவாய்ப்புக்கிடைத்தது.

சிறிமாவோ அரசாங்கத்தில் பத்தாயிரம் ஆசிரிய மாணவர்களுக்குவேலைவழங்கப்பட்டது. அந்த நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 120ஆசிரியமாணவர்களுக்கே வேலைவழங்கப்பட்டது. இன்று நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் வேலையற்று இருக்கிருர்கள்'' என வவனியா எம். பி. திரு. ரி சிவசிதம்பரம்உடுப்பிட்டி தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியின் நாலாவது மகாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

1960-ம் ஆண்டு தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் தொகுதிதோறும் 25, 30 ஆசிரிய மாணவர்களை எடுத்து வேணுமென்று கட்டாயப்படுத்திேம். நியமனமும் கொடுபட்டது அதற்குமுன்னர் இடதுசாரிக்கட்சியை நம்பியிருந்தோம். ஏமாற்றப்பட்டோம். நாம் சிங்கள மக்களுடன் ஒத்துழைத்து ஆதரவு பெருவிட்டால் நாம் என்றும் அழிவுப் பாதையிலே போகநேரிடும் இந்த நாட்டுப் பிரஜை என்ற ரீதியிலே சிங்கள மக்களுக்குச்சரிசமமாக நாங்கள் வாழவேண்டுமென்ருல் இருசாராரின் ஒத்துழைப்புந் தேவை. எதிர்கால வாழ்வு சிறக்க, சுதந்திரத்தைகாக்க, கலாசாரத்தைப்பேண நாம் ஒன்றுபடவேண்டும்''

திரு. ஆனந்தசங்கரி பேசுகையில், இங்கு மார்க்ஸிஸத்தைப் பரப்பச்சிலர் முயலுவதாகவும், இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மார்க்ஸிஸக் கட்சிகளுக்கு உற்சாகம்கொடுத்தகாலம் இருந்ததென்றும், கால்மார்க்ஸ் மத விரோதியாக இருந்ததில்லையென்றும், இன்று இடதுசாரிகட்சிகள் மதவிரோதிகளாக காணப்படுகிருர்கள் என்றும் சொன்னுர்

விழா ஆரம்பமாகிறதற்கு முன் கரவை தச்சந்தோப்புப்பிள்ளையார் கோவிலிலிருந்து உழவு இயந்திரத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட முத்துச்சப்பறத்தில் வவனியா எம். பி., உடுப்பிட்டி எம். பி பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு எஸ். நடராசா, திரு ஆனந்தசங்கரி, திரு என் ரி சிவஞானம், திரு கே மோதிலால்நேரு ஆகியோர் விழா மைதானத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

மற்றும் மோதிலால்நேரு பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, திரு. என். ரி. சிவஞானம் உட்பட வேறுபலரும் பேசினுர்.

நெல்லியடி மகாத்மா தியேட்டருக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு திரு. அ. அகஸ்தீன் தலைமை வகித்தார்.

## பிசசை எடுக்கப் பயிற்சி

கண்டி, ஞாயிறு

7 வயதுக்கும் 10 வயதுக்கும் உட்பட்ட அநேக சிறுவர்கள் கண்டி வீதிகளில் தினமும்எந்நேரமும் பிச்சை எடுத்துக் கொண்டு திரிகிருர்கள். பஸ்தரிப்பு நிலையங்கள் சந்தை மற்றும் பொது இடங்கள் எங்கும் இவர்களைக் காணலாம்.

இச்சிறுவர்களுககு இவர்களின் பெற்ருேர்கள் பிச்சை எடுக்கப்பயிற்சி யளித்துள்ளார்களாம். இச்சிறுவர்களைப் பெற்ருேர்கள் காலையில் கொண்டுவந்து இப்பொது இடங்களில் விட்டுவிட்டு அவர்களும் சமீபத்திலேயே தங்கி பிச்சைஎடுப்பதாகவும் இச்சிறுவர்கள் பொதுமக்களுக்குப் பெருந்தொல்லை கொடுக்கிருர்கள் எனவும்தெரிய வந்துள்ளது

## பொலிஸார் வேண்டுகோள்

மட்டுவில், ஞாயிறு

''திருடர்கள் உங்களுடன் கூடவே நண்பர்களைப்போல் நடித்துக்கொண்டு நோட்டம் பார்த்துத் திரிகிருர்கள். சந்தர்ப்பம் பார்த்துக் கிடைத்ததைச் சுருட்டும் நோக்கத்துடன் இருக்கிருர்களென்பதை ஒவ்வொரு பொதுமக்களும் அவதானிப்பதுடன், உங்கள் உடைமைகளுக்கும், பணத்துக்கும் தக்க பாதுகாப்பைத் தேடிக்கொள்வது பொது மக்களாகிய உங்கள் கடமை. தவிர சகல வீடுகளையும் பொலிஸாரால் கண்காணிக்கமுடியாது.''

இவ்வாறு, நாட்டில் திருட்டு நடைபெறச் சந்தர்ப்பம் கொடுக்காது உஷராக இருக்கும்படி, சாவகச்சேரி பொலிஸ்நிலையஅதிபர் திரு. கு துரைசிங்கம் பொதுமக்களை ஒரு பகிரங்க அறிக்கை மூலம் வேண்டிக்கொண்டிருக்கிருர்.

திரு. துரைசிங்கம் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ள்தாவது:

''அடுத்து வரும் பொதுத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்கள் இலங்கையில் சில பாகங்களில் ஆரம்பமாகிவிட்டன. அதில் தென்மராட்சித்தொகுதியும் ஒன்ருகும். இதில் கட்சிக்கொடிகளை அறுப்பது, கல்லெறிவது போன்ற அசம்பாவிதங்களைச் செய்யாது ஒழுங்கும் நேர்மையுமுள்ள பொதுமக்களாக நடந்துகொள்வதன்மூலம் பொலிஸாரின் பொறுப்புகளைத் தளர்த்தி உதவுங்கள்.

வீடுகளை எச்சரிக்கையாக வைத்திருப்பதன் மூலம், திருட்டைத் தடுக்கலாமென்றும், சைக்கிளைப் பூட்டிவைத்துக் கொள்ளும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 'அரசாங்கம் உதவும்'

குருநாகலை, ஞாயிறு

'குடிசைக் கைத்தொழிலுக்கு போதியளவு உதவ அரசாங்கம் எப்போதும் தயாராகஇருக்கிறது. இதன் மூலம் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கலாம்.'

இவ்வாறு உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யு தகநாயகா குருநாகலையில் லக்சலாவைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

துல்கிரியா நெசவாலை இயங்கத் தொடங்கியதும் 7,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## திருட்டுவழக்கில் தீர்ப்புஒத்திவைப்பு

மல்லாகம், ஞாயிறு

மல்லாகத்தைச் சேர்ந்த இரத்தினம், அப்புத்துரை, செல்வராசா ஆகிய மூவரும் களவு பான நீர் இறைக்கும் இயந்திரத்தை வைத்திருந்ததாக சுன்னுகம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவழக்கு விசாரணை முடிவில் மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி எதிரிகளை குற்றவாளிகளாகக் கண்டு தண்டனை வழங்குவதற்காக அடுத்த மாதம் 5ம்திகதிவரைவிளக்கமறியலில் வைத்துள்ளார். சுன்னுகம் பொலிஸ்தரப்பில் வழக்கை வழக்கறிஞர் சிவஸ்ரீதரன் நடாத்திஞர்.

## ஆனையிறவு ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டுமென்ற கிளர்ச்சி அர்த்தமற்றதாகும். அது அகற்றப்பட்டால் நமதுஉள்ளூர் உற்பத்திப் பொருள் விலை வீழ்ச்சியடையும் என்பது நிச்சயம்; இதனுல் வெளிநாட்டிலிருந்துவெண்காயம் போன்ற பொருள்கள் இறக்குமதியாகுமென்பது உறுதி. எனவே ஆனையிறவு தடைமுகாமை அகற்ற வேண்டாமென இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்''.

வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில், அமரர் காட்டிய பாதையில் தமிழரசுக்கட்சி அன்றும், இன்றும், என்றும் தனது இலட்சியப் போராட்டத்தை தொடர்ந்து நடாத்தி வருகிறதெனவும், 48ம் ஆண்டு முதல் இன்றுவரை பூரண சிங்கள அமுலை அரசாங்கத்தின் திட்டப்படிஏற்படுத்த விடாது தமிழ் நாட்டையும், தமிழ் மக்களையும் பாதுகாத்துவரும்பெருமை தமிழரசுக்கட்சிக்கே உரியது என்றும், அமரர் வன்னியசிங்கம் காட்டிய பாதையில் தொடர்ந்தும் அறப்போராட்டங்கள் மூலம் நமதுஇலட்சியத்தை பெற முன்வருவதே அவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனெனவும் கூறினுர்.

உடுவில்ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி தருமலிங்கம், அட்வகேட் ஆலாலசுந்கரம், கிளிநொச்சி எம் பி திரு. கா பொ இரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்படப் பலர் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org